பக்கங்கள்: 16 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir


விழயல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | சித்திரை 20 வியாழக்கிழமை 03.05.2018 | கதிர் 178

## கிளைபோசெட் தடை நீக்கம்

கொழும்பு, மே 03
தேயிலை மற்றும் இறப்பர் செய்கைகளுக்குக் கிளைபோசெட் பயன்படுத்த விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் நவீன் திஸாநாக்க தெரிவித்துள்ளார்.
பக்கம் 14 »

# தீர்வில் அரசு இழுபறி தமிழ் மக்கள் சந்தேகம்

## சம்பந்தனுக்கு செல்வம் எம்.பி. அவசரக் கடிதம்



கொழும்பு, மே 03
"தமிழருக்கான அரசியல் தீர்வு விடயத்தில் கூட்டு அரசின் இழுபறி நிலை அல்லது காலம் தாழ்த்தும்போக்கு எம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே இது தொடர்பில் அரசுக்குக் கூடுதலான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும்."
- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனிடம் வலியுறுத்திக் கேட்டுள்ளார் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன். பக்கம் 14 »

## 20,000 பட்டதாரிகளுக்கு ஜூனில் அரச நியமனம்

### பயிற்சிக் காலம் ஓர் ஆண்டாகக் குறைப்பு

கொழும்பு, மே 03
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சால் நாடு முழுவதும் பட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைத்துக் கொள்வதற்கு நடத்தப்பட்ட நேர்
பக்கம் 14 »

## புலிகளின் ஆயுதம் தேடி மீண்டும் அகழ்வுப் பணி



கிளிநொச்சி, மே 03
கிளிநொச்சி - அறிவியல்நகர் பகுதியில் புலிகளின் ஆயுதங்கள் காணப்பகின்றன எனக் கிடைத்த தகவலையடுத்து அங்கு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
பக்கம் 14 »

## வவுனியா காட்டில் திடீர்த் தீ



வவுனியா, மே 03
வவுனியா - நெடுங்கேணி, தண்டுவான் பகு
பக்கம் 14 »

# 57,000 பட்டதாரிகளுக்கும் ஒரே தடவையில் அரச பணி

### வலியுறுத்தி மே 8 போராட்டம்

கொழும்பு, மே 03
வேலையற்ற பட்டதாரிகள் சுமார் 57 ஆயிரம் பேரும் ஒரே தடவையில் அரச சேவைக்குள் இணைக்கப்பட வேண்டும். அதுவே ஜனாதிபதியும் பிரதமரும் எமக்கு வழங்கிய உறுதிமொழி. அதனை வலியுறுத்தி வரும் மே 8ஆம் திகதி கொழும்பில் மாபெரும் போராட்டம் நடத்தப்படும்
- இவ்வாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கங்கள் அறிவித்துள்ளன.
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்
பக்கம் 14 »

## இனித்து ரகசியம் அல்ல!

நேற்று முன்தினம் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் ஒரு விடயத்தைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.
நேற்று என்னைச் சந்தித்த இன்னொரு அரசியல்வாதி அது குறித்துப் பிரஸ்தாபித்தார்.
*"தம்பி, உவர் கஜேந்திர*
பக்கம் 03 »

## முள்ளிவாய்க்காலில் மே 18 சகலரும் ஒன்றிணையுங்கள்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுக் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 03
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் இனவழிப்பு நினைவேந்தல் நிகழ்வுக்கு அனைவ
பக்கம் 14 »

## வவுனியாவில் நேற்று இரண்டு விபத்துக்கள்



வவுனியா, மே 03
வவுனியா ஏ - 9 வீதியில் நேற்று இரு வேறு வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.
நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த ஹைஏஸ் ரக வாகனம் ஒன்று கனகராயன்குளம் பகுதியை அண்மித்த
பக்கம் 14 »

## வடக்கு – கிழக்கில் இன்று வெப்பநிலை மிக உச்சம்!

### மக்களுக்கு எச்சரிக்கை



கொழும்பு, மே 03
வடக்கு - கிழக்கு உள்பட 5 மாகாணங்களில் இன்று அதிக வெப்பநிலை நிலவும் என வளிமண்டலவியல்
பக்கம் 14 »

## இ.போ.ச. பஸ் மோதிய முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 03
அரச பஸ்ஸால் மோதுப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.
கடந்த மாதம் 24 ஆம் திகதி வீதியில் சென்ற பாத
பக்கம் 03 »

## ராஜாங்க, பிரதி அமைச்சர்கள் 18 பேர் நேற்றுப் பதவியேற்பு



கொழும்பு, மே 03
புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 08 இராஜாங்க அமைச்சர்களும் 10 பிரதி அமைச்சர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்தனர்.
அமைச்சரவை மறுசீரமைப்பின் முதற்கட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையிலேயே நேற்று இரண்டாம் கட்டம் இடம்பெற்றது.
பக்கம் 14 »

## இயலாமையில் நல்லாட்சி அரசு

### ஜே.வி.பி. சாடல்

கொழும்பு, மே 03
அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் நான்கு முறை அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்து, தனது இயலாமையைக் காட்டியுள்ளதாக ஜே.வி.
பக்கம் 14 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

# இலங்கையில் நடந்த உரிமை மீறல் விடயத்தில் தென்னாபிரிக்க நிலைப்பாட்டைச் சாடுகின்றார் நவி



கொழும்பு, மே 03

இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான விவகாரத்தில் தென்னாபிரிக்காவின் நிலைப்பாட்டை, அந்த நாட்டின் முன்னாள் நீதிபதியும், முன்னாள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருமான நவநீதம்பிள்ளை அம்மையார் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஹேக் நகரில், நடைபெற்ற சட்டவாளர் சங்கத்தின் போர்க்குற்ற விவகாரக் குழுவின் கருத்தரங்கில் பங்கேற்றுள்ள நவநீதம்பிள்ளையிடம், ஊடகம் ஒன்று எழுப்பியிருந்த கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் தென்னாபிரிக்கா மற்றும் அனைத்துலகச் சமூகத்தின் அணுகுமுறைகளைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

கூட்டுச்செயற்பாட்டைக் காணவில்லை. தனிப்பட்ட நலன்கள், பிராந்திய நலன்கள், கூட்டுச் செயற்பாட்டுக்குத் தடையாக உள்ளன. பல்வேறு வடிவங்களில் நாடுகள் இப்போது தமக்கிடையில் சிறு சிறு அமைப்புகளை உருவாக்குகின்றன. அவர்கள் தமது நலன்களைத் தான் முக்கியமாகப் பார்க்கிறார்கள்.

சில வேளைகளில் பயங்கரமான மீறல்களில் ஈடுபட்டிருந்தாலும், தமது குழுக்களில் உள்ள நண்பர்களுக்காக, தீர்மானங்களை எதிர்த்து வாக்களிக்கிறார்கள்.

ஜனநாயகக் தென்னாபிரிக்கா அதனைச் செய்து எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. உள்நாட்டு விவகாரம் என்பதால், இலங்கை மோதல்கள் குறித்து விசாரணை நடத்தக் கூடாது என்று தென்னாபிரிக்கா கூறியிருந்தது.

நிறவெறியை ஒரு உள்நாட்டு விவகாரமாக அனைத்துலக சமூகம் கருதியிருந்தால், அதனை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

அப்படியாயின், நாங்கள் இன்னமும் நிறவெறித் துன்பங்களையே அனுபவித்துக் கொண்டிருந்திருப்போம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

# பொன்சேகாவை கண்டால் விலங்குகள் பயந்து ஓடும்!



மஹிந்த கூறுகிறார்

கொழும்பு, மே 03

அமைச்சரவை மாற்றத்தின் போது வனவிலங்கு அமைச்சு மாத்திரமே விஞ்ஞான ரீதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அமைச்சு விஞ்ஞானத்தின் உயிரியல் ரீதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

வனவிலங்கு அமைச்சுக்கு நியமிக்கப்பட்டுள்ள புதிய அமைச்சர் வருவதாகக் கேள்விப்பட்டால் காட்டிலுள்ள விலங்குகளும் பாய்ந்து ஓடும் எனவும் அவர் கூறியுள்ளார்.


நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

வழங்கப்படவுள்ள அமைச்சுக்கள் விஞ்ஞான ரீதியில் அமையும் என அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனா அறிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே மஹிந்த இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அமைச்சரவை மாற்றத்தின்படி வனவிலங்குகள் அமைச்சராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சரவை மாற்றங்கள் மட்டுமே அரசின் செயல்திறன் என்கிறார் விமல்!



கொழும்பு, மே 03

அரசு அமைச்சரவை மாற்றங்கள் மூலம் மட்டுமே தனது செயல்திறனைக் காண்பித்துள்ளது என தேசியசுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், புதிதாகப் பதவியேற்றுள்ள அரசின் புதிய அமைச்சரவை குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு பதவிக்கு வந்த நாளில் இருந்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதனை முன்னேற்ற அரசு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அமைச்சரவையின் அனுமதியின்றி அரசு, சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை கைச்சாத்திட்டுள்ளது எனவும் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார்.

# சரத் பொன்சேகாவை கிண்டலடிக்கும் நாமல்



கொழும்பு, மே 03

அமைச்சரவை மாற்றத்தின் போது, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு மாத்திரமே விஞ்ஞான முறையின் அடிப்படையில் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது எனக் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை புனுகுப் பூனை என்று அழைப்பதுண்டு. அவருக்கு அமைச்சரவை மாற்றத்தின் மூலம், வன வாழ் உயிரினங்கள் அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. இது அவருக்குப் பொருத்தமான அமைச்சுத்தான்.

ஆனால் விஜித் விஜிதமுனி சொய்சாவுக்குக் கடற்றொழில் அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. அவருக்கும் கடலுக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றும் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேவேளை, தமக்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சுப் பதவி குறித்து திருப்தியடைந்துள்ளதாக அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முன்னரை விட இப்போது கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக நீடிக்கும், யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்களுக்கு தீர்வு காண முயற்சிப்பேன்.

முன்னைய அமைச்சின் மூலம், ஒதுக்கப்பட்ட நிதியை அடிமட்ட மக்களுக்குப் பயன்படுத்தினேன்.

புதிய அமைச்சின் மூலம் கிராமப்புற மக்களுக்கு, பணியாற்ற முடியும் என்று நினைக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு சட்டம், ஒழுங்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெசாக் பண்டிகைக் காலச் சுற்றிவளைப்பில் 850 இற்கு மேற்பட்ட சட்டவிரோத சம்பவம்

கொழும்பு, மே 03

வெசாக் பண்டிகைக் காலகட்டத்தில் கலால் திணைக்கள அதிகாரிகள் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலில் 850 இற்கும் அதிகமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இதில் சட்டவிரோதமாக மதுபானப் போத்தல்களை வைத்திருந்தமை, சட்டவிரோத போக்குவரவுச் செய்தமை தொடர்பான 395 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த 191 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவை தொடர்பாக 670 பேரைக் கைது செய்து, கலால் பிணையின் மூலம் விடுவித்ததாக கலால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் நாள்களில் அவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும். கூடுதலான சுற்றிவளைப்புகள் மக்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


(க)

# ராணுவ உதவியுடன் 'நிலையான வளர்ச்சி' கருத்தரங்கு

மேற்கு பாதுகாப்புப் படைத் தலைமையம், உபகரண மாஸ்டர் ஜெனரல், விவசாயப் பணியகம், இராணுவ பாண்ட் மற்றும் நாடகக் கலை பணியகம், பொறியியலாளர் சேவை பணியகங்களின் பங்கேற்புடன் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க பங்களிப்புடன் ராஜகிரி பொறளையில் அமைந்துள்ள 'ஸ்ரீ சதா ஹம் செவன' வளாகத்தில் நேற்றுமுன்தினம் மாலை நிலையான வளர்ச்சி என்ற நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டு பன்னாட்டு பௌத்த மாநாட்டு அமர்வுகளைத் திறந்து வைத்தார்.

வெளிநாட்டு நாடுகளிலிருந்து 20 இற்கும் மேற்பட்ட பௌத்த பிரதிநிதிகள் இந்த நிகழ்வுக்கு வருகை தந்தனர். இந்த நிகழ்வில் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன உரை நிகழ்த்தினார்.



வென் நிறுவனத்தின் உதவியுடன் அத்துரலிய ரத்ன தேரரின் பங்களிப்புடன் 'பிவித்துரு ஹெடக்' இராணுவ திட்டத்தின் கீழ் இயற்கை வளங்கள், மண்டபம் ஏற்பாடுகள், அலங்காரங்கள், உள் கட்டமைப்பு வசதிகளை தயாரிப்பது தொடர்பான கருத்தரங்கு இடம்பெற்றது.

# மினுவன்கொடயில் விபத்து: இரண்டு பேர் உயிரிழப்பு!

கொழும்பு, மே 3

மினுவன்கொடைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

மினுவன்கொடை தேவாலபொலப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இந்த வாகன விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவில் பயணித்தவர்களே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மினுவன்கொடைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# ரவியைப் புறக்கணித்ததால் பெரும் சிக்கலுக்குள் ரணில்



முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு இம்முறை அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சர் பதவியை வழங்காமை குறித்து ஐக்கிய தேசியக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் தலைமைத்துவத்திடம் கேள்விகளை எழுப்பியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இதற்கு முன்னர் அமைச்சர் பதவியில் இருந்து விலக்கப்பட்ட விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு மீண்டும் அமைச்சர் பதவியை வழங்க முடியுமாயின் எந்தக் காரணத்திற்காக ரவி கருணாநாயக்கவுக்கு அமைச்சர் பதவியை வழங்கவில்லை என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ரவி கருணாநாயக்க நிதியமைச்சராக பதவி வகித்த காலத்தில் நடந்த மத்திய வங்கியின் பிணை முறிப்பத்திர மோசடி சம்பந்தமாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அவரை குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்துள்ள நிலையில், அவர் நிதியமைச்சர் பதவியில் இருந்து விலக நேர்ந்தது.

அதன் பின்னர் நியமிக்கப்பட்ட வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்தும் அவர் விலகினார். அமைச்சர் பதவியில் இருந்து விலகி ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான எதிர்க்கட்சியினர் அவருக்குச் சேறுபூசும் பிரசாரங்களை மேற்கொண்டபோது அவர், அவற்றைத் தனியாக எதிர்கொள்ள நேரிட்டது எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமைச்சர் விஜேதாஸ நீண்டகாலமாக மஹிந்த உட்படக்கூட்டு எதிர்க்கட்சியினருடன் தொடர்புகளைக் கொண்டுள்ளார் எனக் குற்றம் சுமத்தப்பட்டது. அரசிலும் அமைச்சரவையில் இருப்பது குறித்தும் தான் வெட்கப்படுவதாக விஜேதாஸ ஒரு முறை கூறியிருந்தார்.

இவ்வாறு கூறியிருந்த அவர் நேற்று முன் தினம் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக மீண்டும் சத்தியப்பிரமாணம் செய்துக்கொண்டார். இப்படியான நபருக்கு அமைச்சரவையில் இடம்பெற முடியுமாயின் ரவி கருணாநாயக்க தொடர்பில் என்ன பிரச்சினை இருக்கின்றது எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஐ)

# தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான சர்வதேச மாநாடு

தகவலறியும் உரிமைச் சட்டத்தினூடாக பிரஜைகளை வலுவூட்டல் - முதலாம் ஆண்டு எனும் தொனிப் பொருளில் மே மாதம் 8 ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளில் தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான மாநாடொன்று இடம்பெறவுள்ளது.

தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான சர்வதேச மாநாட்டை கொழும்பு நோர்வே தூதுவராலயம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் ஆகியன இணைந்து ஏற்பாடுசெய்துள்ளன.

இந்த மாநாடு சர்வதேச ஊடக சுதந்திர தினம் மற்றும் இலங்கையில் தகவலறியும் உரிமைச் சட்டத்தை அமுல்படுத்தி ஓராண்டு பூர்த்தியினையும் முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ளது.

கொழும்பு - 07 சுதந்திர சதுர்க்க அவனியூவில் அமைந்துள்ள கொள்கை கற்கைகளுக்கான நிறுவகத்தில் இரண்டுநாட்கள் இந்த மாநாடு இடம்பெறும்.

நோர்வே, இந்தியா, மெக்சிக்கோ, பங்களாதேஷ், மியன்மார் போன்ற நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற பேச்சாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் தகவலறியும் உரிமைச் சட்டத்தில் நிபுணத்துவம் பெற்ற தகவலறியும் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புக்களின் பரிந்துரையாளர்கள் நல்லாட்சி ஊக்குவிப்பாளர்கள், முன்னணி ஊடகவியலாளர்கள் போன்றோர் இணைந்து தகவல் தேடுவோரின் பாதுகாப்பு - ஆபத்து, தனிப்பட்ட தரவுகளை பாதுகாத்தல், ஊடகம், சிவில் சமூக அமைப்புக்களின் வகிபாகம், எதிர்காலத்தில் தகவலறியும் உரிமைச் சட்டம் மற்றும் தகவல் வெளிப்படுத்தல் நுணுக்கங்கள் எனும் தலைப்புக்களில் கலந்துரையாடவுள்ளனர்.

மேலும் இந்த மாநாட்டில் அமைச்சுக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்கள், உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தகவலறியும் உரிமைச் சட்டத்தில் புகழ்பெற்ற செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாடு இலங்கையில் தகவலறியும் உரிமைச் சட்டத்தினை முன்னோக்கிக்கொண்டு செல்ல சிவில் சமூக அமைப்பினர், ஊடகங்கள் மற்றும் தனியார் துறையினருக்கு ஒரு தளமாக அமையும்.

இலங்கையில் ஆகஸ்ட் 2016 ஆம் ஆண்டில் தகவலறியும் உரிமைச் சட்டமூலம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி 03 ஆம் திகதி சட்டமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*குமார் பொன்னம்பலம் கூட்டமைப்புத் தலைமையைத்தான் தாக்கு தாக்கு எண்டு தாக்குகின்றார். கூட்டமைப்பின் தலைமைதான் தமிழினத்துக்குப் பெரும் துரோகிகள் எண்டு வசைபாடுகிறார். சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசாவை எல்லாம் ஒரு;வாங்கு வாங்கினார். அது தவறு எண்டு நான் சொல்ல வரேல்லை..."*

*"அவை தப்புச் செய்தால், மாற்றுத் தலைமை எண்டது அவையளுக்கு - கூட்டமைப்புத் தலைமைக்கு - மாற்று எண்டு தானே அர்த்தம்...?"*

- என்று கேட்டார் அந்த அரசியல்வாதி. நான் பெருமாள் மாடு மாதிரித் தலையாட்டினேன்.

*''மாற்றுத் தலைமைகள் ஒன்றாவதைத் தடுப்பதற்குப் பாரிய சதி முயற்சிகள் நடக்குது எண்டும் அவர் மேதினத்தில் முழங்கினவர். யாராம் அந்தச் சதியைச் செய்யினம்...?"* - என்று என்னைப் பார்த்துக் கேட்டார் அவர்.

*"ஒருவேளை பேப்பர்காரரான எங்களைச் சொல்லுறாரோ...?"* - என்று நான் சிலேடையாகக் கேட்டேன்.

*"இல்லைத் தம்பி. மாற்றுத் தலைமைகள் ஒன்றாவதற்கு முதல் தடை தாங்கள்தான் எண்டதை அவர் உணரவேண்டும். இந்தியப் படைகள் காலத்திலை தாங்கள் 'துரோகிகள்' எண்டு சொன்னவையளைக் கூடப் பிற்காலத்திலை புலிகள் அரவணைத்துக் கொண்டவை. அந்த யுத்தக் காலத்திலை நடந்த விடயங்களை விடவே இப்போ துரோகங்கள் நடந்து போட்டுது...? புளொட்டைத் துரோகிகள் எண்கினம். புளொட்டை அந்தப் பக்கத்திலை வைச்சுக் கொண்டு பொட்டு ஆக்கள் என்ன செய்தவை, யார் துரோகிகள் எண்டது எல்லாம் நீண்ட கதை தம்பி... உங்களுக்கும் கொஞ்சம் தெரிஞ்சு இருக்கும். உவையள் தாங்கள் மட்டும்தான் 24 கரட் எண்டு சொல்லிக் கொண்டு, இப்ப மாற்றுத் தலைமைக்கு வர்ற முதலமைச்சருக்கும் 'அவரைச் சேர்க்கக் கூடாது, இவரைச் சேர்க்கக் கூடாது, உவர் துரோகி, அவர் காட்டிக் கொடுத்தவர்' எண்டு கதை விடுகினம் எண்டும் கேள்வி. மாற்றுத் தலைமை பல மாக வாறது எண்டால் வெறும் தத்துவம் பேசிச் சரிவராது. அதுக்கு முதல் 'பிரக்கடிக்கல் பொலிடிக்ஸ்' செய்ய வேணும் தம்பி. அது இல்லாமல் வெறும் பொலிஸி பேசுற உவையள்தான் முதலிலை பலமான மாற்றுத் தலைமைக்கு இடைஞ்சல்.'* - என்று ஒரு முழங்கு முழங்கினார் அவர்.

அவர் சொல்லுவதில் ஏதோ விடயம் இருப்பதுபோல எனக்குத் தோன்றுகின்றது.

உங்களுக்கு எப்படிப்படு கின்றது?

- மின்னல் -

# ரூ.45 லட்சம் மோசடி; தபாலதிபர் மறியலில்

யாழ்ப்பாணம், மே 03

45 இலட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தபாலதிபரை எதிர்வரும் 16ஆம் திகதிவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

அனுராதபுரம் பகுதியில் தபாலதிபராகக் கடமையாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்தேகநபர், அநுராதபுரத்தைச் சேர்ந்த முஸ்லிம் வர்த்தகர் ஒருவரிடமிருந்து 45 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டு திருப்பிக் கொடுக்காமல் அவரை ஏமாற்றியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் சந்தேகநபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி முறைப்பாட்டாளரான முஸ்லிம் வர்த்தகரே வியாபாரத் தேவைகளுக்காகப் பணத்தைப் பெற்றார் எனவும் அவரது காசோலைகள் தம்மிடம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

பொலிஸாரின் விசாரணை நடவடிக்கைகள் முடிவு பெறாமையால் சந்தேகநபரை இந்த மாதம் 16ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ஐ)

# வேலை தருவதாகக் கூறி மோசடி செய்தவர் கைது

கொழும்பு, மே 03

விவசாயத் திணைக்களத்தில் தொழில் வாய்ப்புப்பெற்றுத்தருவதாகக் கூறி நாட்டின் பல பகுதிகளில் இளைஞர் யுவதிகளை ஏமாற்றிப் பணம் பறித்த சந்தேநபர் ஒருவர் மாத்தளை நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் வேலை வாய்ப்பைப் பெற்றுத்தருவதாகக் கூறி, இளைஞர் யுவதிகளிடமிருந்து 30,000 முதல் ஒரு இலட்சம் ரூபா வரை பணம் பெற்றுக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரைக் கைது செய்த இடத்திலிருந்து விவசாய அமைச்சின் முகவரி இடப்பட்ட அரச முத்திரை பதிக்கப்பட்ட கடிதங்கள், போலி இறப்பர் முத்திரைகள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பணத்தைக்கொடுத்து ஏமாற்றமடைந்த பலரால் நாட்டின் பல பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# யாழ். இளைஞன் இந்தியாவில் சாவு

சென்னை, மே 03

இந்தியாவில் இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி யாழ். இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த திங்கள்கிழமை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில், பருத்தித்துறை தும்பளைப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய லோகேஸ்வரன் கார்த்தீபன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

புலம் பெயர் நாடு ஒன்றிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள உறவினர்களைப் பார்ப்பதற்கு இந்த இளைஞரும் அவரது தாயாரும் இந்தியா சென்றுள்ளனர்.

இந்த நிலையில் கடந்த திங்கள் காலை உறவினர்களுடன் வெளியில் சென்ற வேளை வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதியுள்ளது.

இந்த கோர விபத்தில் சாரதி உட்பட அந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் தாயார் ஆபத்தான நிலையிலும், ஏனைய அனைவரும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

விபத்தில் உயிரிழந்த இளைஞனுக்குச் சில மாதங்களில் திருமணம் இடம்பெற இருந்ததாகவும், இதற்குத் தயாரான நிலையில் இந்த துயரச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (ஐ)

## இ.போ.ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரி ஒருவரை மோதிய குற்றச்சாட்டில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாரதியைக் கோப்பாய் பொலிஸார் கைது செய்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்திப் பகுதியில் விபத்து இடம் பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அத்துடன், சந்தேகநபரான சாரதிக்கு இவ்வாறான குற்றத்துக்கு இதற்கு முன்னரும் நீதிமன்றால் தண்டம் அறவீடு செய்யப்பட்டது என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

சாரதி சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பம் செய்திருந்தபோதிலும் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், சாரதியை இன்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சின்னத்தம்பி கோபாலகிருஸ்ணன் (வயது - 68) என்ற முதியவர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று உயிரிழந்தார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணையை நடத்தினார். அதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-7)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இருளாட்சியே தொடர்கின்றது

**சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம் இன்றாகும்.**

**ஜனநாயகத்தின் நான்காவது தூணாக – காவல் நாயாக – விளங்குவது ஊடகம்.**

மக்களின் தோழனாய், தோளோடு தோள் கொடுத்து நின்று, மக்களுக்காய்க் குரல் கொடுப்பன ஊடகங்கள். அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதில் முன்னிற்கும் ஊடகங்கள் அதனால் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள் அனேகம்.

1991 மே மாதம் 3 ஆம் திகதி ஆபிரிக்கப் பத்திரிகைகளால் கூட்டாகப் பத்திரிகை சுதந்திர சாசனம் உருவாக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. இதுவே பின்னர் சர்வதேச பத்திரிகை தினம் பிரகடனப்படுத்தப்பட வழி கோலிற்று.

யுனொஸ்கோ அமைப்பின் பரிந்துரைக்கு அமைய, 1993 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் பத்திரிகை சுதந்திர தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதன் இருபத்தியைந்தாவது ஆண்டில் நாம் இப்போது நிற்கின்றோம். இது தொடர்பான சர்வதேச வெள்ளி விழா நிகழ்வுகள் நேற்றும் இன்றும் கானா நாட்டின் அக்ரா நகரில் அந்த நாட்டின் தலைவரான ஜனாதிபதி நனா அக்குவோ – அடோவின் பங்குபற்றுதலுடன் நிகழ்கின்றன.

*'அதிகாரத்தைக் கண்காணிப்பில் வைத்திருந்தல்: ஊடகம், நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சி'* – என்பதே இந்த வருடத்துக்கான சர்வதேச ஊடக சுதந்திர தினத்தின் தொனிப் பொருளாகும்.

*"இந்த சர்வதேச ஊடக சுதந்திர தினத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தை மேலும் வலுப்படுத்தி, ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும்படி நான் அரசாங்கங்களை வலியுறுத்திக் கோருகின்றேன். பத்திரிகைச் சுதந்திரத்தை மேம்படுத்த முயல்வது என்பது உண்மைக்கும் உரிமைக்குமாய் எழுந்து நிற்றலாக இருக்கும்."* – ஐ.நா. செயலாளர் நாயகம் அன்ரோனியோ குட்டரஸ் இவ்வாறு இன்றைய சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை ஒட்டித் தாம் விடுத்த செய்தியில் தெரிவித்திருக்கின்றார்.

இந்த வருடத்தில் சர்வதேச பத்திரிகை சுதந்திர தினத்தின் தொனிப் பொருளில் முக்கிய சில விடயங்கள் அடங்கியிருக்கின்றன என்று சர்வதேச ஊடக அமைப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

ஊடக சுதந்திரத்துக்கான சட்டப் பாதுகாப்புச் சூதுலின் முக்கியத்துவத்தை உணர வைத்து, அதை நிலை நிறுத்துவதும், சுயாதீன ஊடக நிலைமையை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சுயாதீன நீதிப் பொறிமுறை மற்றும் ஊடகவியலாளர்களை குற்றவியல் சட்ட முறைகளின்றும் பாதுகாத்தல் ஆகியவற்றை வலியுறுத்துவதும் இந்த வருடத்துக்குரிய பத்திரகை சுதந்திரத் தொனிப் பொருளின் முக்கிய ஊள்ளடக்கமாகும்.

இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்துக்கான இருண்ட காலம் ஓரளவுக்கு முடிவுக்கு வந்து விட்டது என்பது உண்மை.

1990 இல் ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி. சொய்ஸா கடத்தப்பட்டு, சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டதுடன் ஆரம்பித்த அந்த இருளாட்சி, 2015 ஜனவரியில் தற்போதைய ஆட்சி மாற்றம் வரை தொடர்ந்தது.

தற்போதைய சூழலில் ஊடக சுதந்திரம் மேம்பாட்டிருக்கின்றது என்ற கூறப்பட்டாலும், இருளாட்சிக் காலத்தில் – யுத்த வேளையில் – தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்ந்த மிகக் கொடூரமான, மிகக் கோரமான, மிகக் குரூரமான செயல்களையும் அவற்றைப் புரிந்த கிரிமினல் குற்றவாளிகளையும் மூடி மறைத்து, சட்டத்தினின்றும் காப்பாற்றும் அடாவடித்தனம் இன்னும் தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தினால் வேண்டுமென்றே திட்டமிட்டுக் கடைப்பிடிக்கும் போக்குத் தொடரவே செய்கின்றது.

இருளாட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட லஸந்த விக்கிரமதுங்க, கொடூரமாகத் தாக்கப்பட்ட கீத் நொயர், காணாலாக்கப்பட்ட பிரகீத் எக்னெலிகொட, கடத்தப்பட்டு தாக்கப்பட்ட போத்தல ஜயந்த போன்றோருக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பான விசாரணைகள் இந்த நல்லாட்சி அரசில் மும்முரமாக நடக்கின்றன. தினசரி அது பற்றிய செய்திகள் வெளியாகின்றன. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய பல படையினர் கைதாகின்றனர். விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன என்பதை முழு அளவில் உணரக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால், இருளாட்சிக் காலத்தில் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களான தமிழ் ஊடகவியலாளர் விடயத்தில், அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பிலான விசாரணைகள் கிணற்றில் போட்ட கல்லாகக் கிடக்கின்றன. எந்த நகர்வும் இல்லை; முன்னேற்றமும் இல்லை.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக அவ்வேளையில் இழைக்கப்பட்ட கொடூரங்களை எல்லாம் 'பயங்கரவாத அழிப்பு நடவடிக்கைகளாகக்' கணித்து அர்த்தம் பண்ணியுள்ள தென்னிலங்கை ஆட்சிப் பீடம் அவர்கள் விடயத்தில் எதுவும் செய்யப் போவதில்லை என்பது நிச்சயம்.

தமிழ் ஊடகவியலாளர்களைப் பொறுத்த வரை, நீதி கிட்டாத – அநீதிப் போக்கே – அவர்களுக்குத் தொடர்கின்றது. ஆகவே, தமிழரைப் பொறுத்தவரை இருளாட்சி முடிந்து நல்லாட்சி பிறந்து விட்டதாகக் கருதுவதற்கு இடமில்லை என்றே தோன்றுகின்றது.

# தமிழர் சேர்ந்து வாழ்வதா பிரிந்து செல்வதா? சிங்களப் பேரினவாதிகளே தீர்மானிக்கட்டும்



மே தினக் கூட்டத்தில் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, மே 03

காலம் காலமாக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வரும் தமிழர்களாகிய நாங்கள் இந்த நாட்டிலே பெரும்பான்மை இன மக்களுடன் சேர்ந்து வாழ்வதா பிரிந்து செல்வதா என்பதனை எமக்கான உரிமைகளை வழங்கமறுக்கும் சிங்களப்பேரினவாத அரசுதான் தீர்மானிக்க வேண்டும் எனக் கிளிநொச்சி முழங்காவிலில் நடைபெற்ற தமிழ்த் தேசிய மே தினத்தில் மக்கள் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மே தின நிகழ்வு நாச்சிக்குடாச் சந்தியிலிருந்து ஊர்திப் பவனிகளுடன் வீதி வழியாக பேரணியாக நகர்ந்து முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் மாபெரும் மே தினக் கூட்டம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு மே தினச் சிறப்புரை ஆற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மேற்படி கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

காலம் காலமாக வாழ்ந்த எமது பூர்வீக பூமியில் நாம் குடியேறி வாழ முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த நாட்டிலே தமிழ் மக்களுக்குரிய தொழிலுரிமைகள் உள்ளிட்ட சகல உரிமைகளும் மறுக்கப்பட்டே வருகின்றன. தமிழ்ப் பகுதிகளிலுள்ள அரச அலுவலகங்களில் பணியாற்றுவதற்குக் கூடத் தமிழர்களைப் புறந்தள்ளிவிட்டுச் சிங்களப் பகுதிகளிலிருந்து சிங்களவர்கள் வரவழைக்கப்பட்டு அங்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றன. சாதாரணசிற்றூழியர்களைக் கூடச் சிங்களவர்களாகவே தமிழ்ப் பகுதியில் நியமிப்பதற்கு இந்தப் பெரும்பான்மையின அரசு முயற்சிப்பதானது எமது மக்களின் தொழிலுரிமையைத் தட்டிக் கழிக்கின்றது.

தமிழ் மக்கள் காலங்காலமாக வாழ்ந்த பூர்வீக நிலங்களிலிருந்து தமிழ்மக்களை வாழ விடாது [illegible]டுப்பதானது பாரிய உரிமை [illegible]ற்றலாகும். இந்த நாட்டிலே [illegible]மிழ் மக்கள் சிங்களப் பேரினவாதிகளால் அடிமைகளாகவே நோக்கி அடக்கி ஒடுக்கப்படுகின்றார்கள். இந்த நாட்டிலே சிங்களவர்களுடன் தமிழ் மக்களும் தமக்குரிய சகல உரிமைகளைப் பெற்று சேர்ந்து வாழ்வதா அல்லது பிரிந்து செல்வதா என்பதை இங்குள்ள சிங்கள மக்களும் சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனைகளில் இயங்குகின்ற அரசுகளும்தான் தீர்மானிக்க வேண்டும். – என்றார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களானமாவைசேனாதிராசா, சி.சிறீதரன், சாள்ஸ் நிர்மலநாதன், ஈ.சரவணபவன், சாந்தி சிறீஸ்கந்தராசா, வடமாகாண சபை உறுப்பினர்களான த.குருகுலராசா, சு.பசுபதிப்பிள்ளை மற்றும் பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஐயம்பிள்ளை, கரைச்சிப்பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள், தொழிலாளர்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (ஐ)

# சகலதுக்கும் போராட்டமெனில் அரசு, ஆட்சி எல்லாம் எதற்காக?

கிளிநொச்சி, மே 03

எல்லாவற்றுக்கும் போராடித்தான் வாழ வேண்டுமென்றால் எதற்காக அரசு? எதற்காக ஆட்சி? எதற்காக அர்சியல் சாசனம்? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஸ்தாபகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய முருகேசு சந்திரகுமார்.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த மேதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்த அரசு பதவிக்கு வரும்போது நல்லாட்சி அரசு என்று தன்னைப் பிரகடனப்படுத்தக் கொண்டே வந்தது. நல்லாட்சிக்கான கூட்டாட்சி என்று தன்னை விளம்பரப்படுத்தியது. ஆனால், நடந்து கொண்டிருப்பது என்ன? இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் மூன்று ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனால் இந்த ஆட்சியாளர்கள் பிரகடனப்படுத்திய, வாக்குறுதி வழங்கிய எந்த விடயங்களிலும் முன்னேற்றம் எட்டவில்லை. ஆனால், விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது. பொருளாதாரச் சுமை அதிகரிக்கிறது. பஞ்சமும்பட்டினியும்வேலையில்லாப் பிரச்சினையும் வளர்கின்றன. அரசியல்தீர்வைப்பற்றியபேச்சுகளைக் காணவேயில்லை. தமிழ் மக்கள் முன்வைத்த எந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை. முஸ்லிம்களின் மீது



சந்திரகுமார் கேள்வி

தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது. இப்படி மக்களுக்கு எதிரான விடயங்களே இந்த அரசின் மூலம் உருவாகியுள்ளன.

இந்த அரசு தொழிலாளர்களுடைய உரிமையை மதிக்கவில்லை. தொழிலாளர்களுடைய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கவில்லை. இந்த நாடு மதத்துக்குக் கொடுக்கின்ற மதிப்பையும் முன்னுரிமையையும் உழைப்பாளிகளுக்குக் கொடுக்கவில்லை. தொழிலாளர் நாளான மேதினத்தையே இன்னொரு நாளுக்கு மாற்றியுள்ளது. இது அநீதியானது. இதிலிருந்தே இந்த அரசு உழைப்பாளிகளை எந்தளவுக்கு மதிக்கிறது என்று புரிகிறது.

இலங்கை இன்று அபாயக் குழிக்குள் விழுந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து மீள்வதற்கு அமைச்சரவை மாற்றங்களைச் செய்தால் போதாது. தலையிடியை மாற்றுவதற்குப் பதிலாகத் தலையணையை மாற்றுவதே இன்றைய ஆட்சியாளர்களின் நடவடிக்கையாக இருக்கிறது. இதுதான் முன்பும் நடந்தது.

கிளிநொச்சி மாவட்டத்திலே வறுமை அதிகரித்துள்ளது. தொழில்துறைகளை உருவாக்கினால்தான் இதிலிருந்து மீள முடியும். ஆனால், அதைப்பற்றி அதிகாரத்திலிருக்கும் எவருமே சிந்திப்பதில்லை. தேர்தலின்போது வாக்குகளைப் போடுவதற்கு மட்டும் மக்களைத் தேடிப்போகிறார்கள். அல்லது மரணச் சடங்குகளுக்கு மட்டும் போகிறார்கள். இதுவா மக்கள் பிரதிநிதிகளின் பணி? மக்களுடைய எதிர்பார்ப்புகள் என்ன? அவர்களுடைய தேவைகள் என்ன? பிரதேசங்களின் சவால்கள் என்ன? என்பதையெல்லாம் அறிந்து வேலை செய்ய வேண்டும். அதுவே மக்களுக்குத் தேவையானதாகும். ஆனால், இதைச் செய்வதற்கு இன்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இல்லை. மாகாணசபை உறுப்பினர்களுமில்லை. தீர்மானங்களை நிறைவேற்றுவதால் மட்டும் காரியங்கள் நடந்து விடும் என்று எண்ணுவது தப்பு. மக்களுக்காக உழைக்க வேண்டும். நாம் உழைப்போம். மக்களுக்காகப் பாடுபடுவோம். அப்படியான ஒரு வரலாறு எங்களுக்குண்டு. – என்றார். (ஐ)

## நாளை

04.05.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம் : மூலம் மு.இ 10.25 வரை
திதி : சதுர்த்தி மு.ப 11.02 வரை
சுபநேரம் : 5.56 – 7.26 வரை
இராகுகாலம் : 10.26 – 11.56 வரை

# மே தினத்தைப் பிற்போட்டமை ஜனாதிபதியின் ஒரு கபட நாடகம்

## தேசிப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு


கொழும்பு, மே 03

தேசிய அரசின் சர்வதேச மே தினக் கொண்டாட்டங்களை வெசாக் தினத்தை முன்னிட்டுப் பிற்போட்டுள்ளது எனப் பொய்யான நாடகத்தை அரங் கேற்றியுள்ளது.

பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் கபட நாடகத்தின் ஒரு அங்கமாகவே இவை காணப்படுகின்றது எனத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர குற்றஞ்சாட்டினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உழைக்கும் மக்களைப் பெருமைப் படுத்தும் முகமாக நேற்று சர்வதேச மட்டத்தில் மே தினம் கொண்டாடப் பட்டது. ஆனால் இலங்கையில் மாத்திரம் சில காரணங்களை மையப்படுத்தி



தேசிய அரசு பாரம்பரியத்திற்கு முரணாக 7 ஆம் திகதிக்குக் கொண்டாட்டத்தை ஒத்திவைத்துள்ளமை வரலாற்றில் பதிய வேண்டியதாகவே காணப்படுகின்றது.

வெசாக் தினத்தை முன்னிட்டு பௌத்த மதகுருமார்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக இந்தத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் காணப்பட்டாலும் அவை மறுபுறத்தில் தொழிலாளர்களுக்குப் பாதகமாகவே காணப்படுகின்றன.

பெரும்பான்மையான மக்கள் மே முதலாம் திகதியையே உழைப்பாளர் தினமாகக் கொண்டாடி வருகின்றனர்.

தேசிய அரசு மே தின விடுமுறை மற்றும் கொண்டாட்டங்களை 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்தாலும், அதனை யாரும் மதிக்கவில்லை. தேசிய அரசே மதிக்காமல் செயற்பட்டு வருகின்றது. ஐக்கிய தேசிய கட்சி மேதினக்கொண்டாட்டங்களை 6 ஆம் திகதி அதவாவது ஞாயிற்றுக்கிழமை கொண்டாடவுள்ளது. இரு கட்சிகளின் ஒன்றிணைந்த நிர்வாகத்திற்கு இது சிறந்த உதாரணமாகக் காணப்படுகின்றது.

மே தினக் கொண்டாட்டங்களை ஒவ்வொரு கட்சிகளும் வெவ்வேறு தினங்களில் கொண்டாடும் போது பல தியாகங்களுக்கு மத்தியில் பெற்றுக் கொள்ளப்பட்ட தொழிலாளர்களின் உரிமைகள் மறைக்கப்பட கூடிய சூழ்நிலைகள் தோற்றம் பெறும்.

தேசிய அரசின் இந்தச் செயற்பாடு காரணமாக எதிர் காலத்தில் உழைப்பாளர்களின் உரிமைகள் பெறுவது உறுதியற்றதாகக் காணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## குழந்தையாக மாறி அன்பைப் பொழிந்த சந்திரிகா!



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குழந்தையாக மாறி அன்பை வெளிப்படுத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மே தினத்தை முன்னிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கங்களின் தலைவர்களை நினைவு கூரும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் காலம் சென்ற பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவை நினைவு கூரும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிக்கா தனது குழந்தையுடன் வருகை தந்திருந்தார்.

ஹிருணிக்காவின் குழந்தையுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குழந்தையாக மாறி விளையாடும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

## சிறுபான்மைக் கட்சிகளின் உடன்படிக்கையை வெளிப்படுத்துங்கள் என்கிறார் தினேஷ்!

அமைச்சரவை மறுசீரமைப்புக்கு முன்னர் அரசிலுள்ள பிரதான கட்சிகள் இரண்டும் சிறுபான்மைக் கட்சிகளுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள புதிய இணக்கப்பாட்டு உடன்படிக்கை குறித்து உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் கூட்டு எதிர்க்கட்சி என்பவற்றின் தலைவர் தினேஷ்குணவர்தன வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அர புதிய பங்காளிக்கட்சிகளுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கை எதுவென்பதை, இதுவரை நாட்டுக்கு



வெளிப்படுத்தப்படவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், முற்போக்குக்கூட்டணி உட்பட சிறுபான்மைக் கட்சிகள் பலவற்றுடன் அரசு உடன்படிக்கை செய்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அமைச்சரவை மாற்றம் அரசுக்குள் உள்ள பிரச்சினைகளை தீர்க்க மாட்டாது என்றும், பிரச்சினைகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய அரசு அமைச்சர்களின் தலைகளை மாற்றிக்கொண்டிருக்கின்றதே அன்றி, நாட்டின் அபிவிருத்துக்கு உரிய வேலைத்திட்டமொன்று அரசிடம் இல்லையெனவும் கூறப்படுகின்றது.

## விடுதலைப் புலிகளின் சீருடைகள், வெடிபொருள்கள் மீட்பு!

திருமலை, மே 03

திருகோணமலை, கோமரங் கடவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புலிக் கண்டிகுளம்பகுதியிலுள்ளகாட்டுக்குள் வெடிபொருட்கள் சில கண் டெடுக்கப் பட்டுள்ளன என கோமரங்கடவெல பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுக்குள் விறகு எடுப் பதற்காகச் சென்ற நபர்கள் வழங்கிய தகவலையடுத்து, இந்த வெடிபொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலி களின் சீருடை இரண்டு உட்பட 16 வெடி பொருட்கள், பெரிய பெட்ரி சாஜர், மல்டி பிளக், 4 அடி நீளமான கோட் வயர் ஆகியன கண்டெடுக்கப் பட்டுள் என என கோம ரங்கடவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மின் தடை

உயர்அழுத்தமற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

யாழ் பிரதேசத்தில் - விடத்தற் பளை, கெற்பலி, கிளாலி ஆகிய இடங்களிலும் -

வவுனியா பிரதேசத்தில் -

கணேசபுரம்கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன்பிட்டி, ஆத்திக்குளி, செம்மண் தீவு நெற்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன் பொஸ்கோ ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் பெருவிழா சிறப்பாக இடம்பெற்றது





முல்லைத்தீவு,மே03

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு - புனித சூசையப்பர் ஆலயத்தின் பெருவிழா பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன.

இந்த வழிபாடுகள் நேற்று முன்தினம் காலை அருட் தந்தை சுதர்சன் தலைமையில் இடம்பெற்றுள்ளன. இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மேலும், குறித்த ஆலயம் இறுதி யுத்தத்தின்போது சேதமாக்கப்பட்ட நிலையில் தற்போது புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எந்த ஒரு எருமையாலும் அரசை வழிநடத்த முடியும்!

கொழும்பு, மே 02

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழித்து யாராலும் உலகில் செய்ய முடியாத சாதனையை நிலை நாட்டியிருந்த காலத்தில் எந்தவொரு எருமையாலும் யுத்தம் செய்ய முடியும் என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கருத்து வெளியிட்டிருந்தார்.

இப்போது நான் கூறுகின்றேன், எந்த ஒரு எருமையாலும் அரசை வழிநடத்த முடியும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தவொரு எருமையாலும் அரசை வழிநடத்திச் செல்லக் கூடிய சூழ்நிலை தற்பொழுது உருவாகியுள்ளது.

வாழ்க்கைச் செலவு வானளவு உயர்ந்துள்ளது. பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.



ஜீ.எல். பீரிஸ் கூறுகிறார்

எரிவாயு விலை உயர்த்தப்பட்டமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி பொருளாதாரத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கடல் அலையால் பாதிக்கப்பட்டும் பகுதியை பாதுகாப்பதற்கு கட்டடம்!

களுத்துறைப் பகுதியில் கடல் அலையினால் பாதிக்கப்பட்டு வரும் பகுதியைப் பாதுகாப்பதற்காக கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக மூன்று கோடி 50 லட்சம் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது எனக் களுத்துறை மாவட்ட செயலாளர் யூ.டி.சி. ஜெயலால் தெரிவித்தார்.

இந்த இயற்கை அனர்த்தத்தைக் கட்டுப்படுத்த முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடல் அலையின் காரணமாக களு கங்கையின் முகாத்துவார பகுதியின் ஊடாகக் கடல் நீர் உட்புகுவதால் தெற்குக் களுத்துறை ரயில் நிலையத்திற்கு பின் புறத்தில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கரையோரப் பாதுகாப்பு திணைக்களம் இந்த கட்டடத்தை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகக் களுத்துறை மாவட்ட செயலாளர் யூ.டி.சி. ஜெயலால் தெரிவித்தார்.

## தினசரி ராசி பலன் (03.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரைத்திங்கள் 20 ஆம் நாள் வியாழக்கிழமை திரிதீயைத்திதி. காலை 9.05 மணி வரை பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: கேட்டை இரவு 7.51 மணி வரை. பின்னர் மூலம். மரணயோகம் இரவு 7.51 மணி வரை பின்னர் சுபயோகம்.

**ராகுகாலம்** - பகல் 1.40 மணி முதல் 3.14 மணி வரை.

**சுபநேரம்** -காலை 7.23 மணி முதல் 8.52 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - சித்திரை மாத தேய்பிறை சதுர்த்தி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - கேட்டை.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** யோசனையான நாள். வருமானம் குறையும். உடல் நலத்தில் ரோகங்கள் உண்டாகும். எண்ணிய காரியம் நிறைவேறுவது கடினம். வியாபாரத்தில் பெரும் நட்டம் உண்டாகும். பிள்ளைகளால் கவலை உண்டாகும்.

**ரிஷபம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். தேக சுகம் பாதிப்படையும். தொழிலில் கடின உழைப்பும், அலைச்சல்களும் அதிகமாகும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்ப உறவில் நல்லிணக்கம் காணப்படும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வினால் வெளியூர்களுக்குச் செல்ல வேண்டி வரும்.

**கடகம்** அனுகூலமான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யும். குடும்ப உறவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்குப் புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும்.

**சிம்மம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். குடும்பத்தில் பெண்கள் விட்டுக் கொடுத்து நடப்பது மூலம் மன அமைதி பெறுவார்கள்.

**கன்னி** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் தொழிலில் கடுமையான முயற்சிகள் எடுக்க வேண்டும். வீடு, காணி விஷயங்களில் கவனமாக இருப்பது நல்லது.

**துலாம்** யோகமான நாள். தனலாபம் பெருகும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வேளிநாட்டு உறவினர்களிடமிருந்து விலை உயர்ந்த பொருள்கள் பரிசாகக் கிடைக்கும். புது வீடு, வாகனம் வாங்குவார்கள்.

**விருச்சிகம்** மேன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அன்பு, பாசம் அதிகரிக்கும். சுய தொழில் மேன்மை அடையும். உத்தியோகத்தர்களுக்கு திறமையின் அடிப்படையில் உயர்வுகள் கிடைக்கும்.

**தனுசு** யோசனையான நாள். பண விஷயங்களில் கவனம் செலுத்துவது அவசியம். கடன் வாங்கியவர்கள் எச்சரிக்கையாக இருப்பது தொல்லைகளைத் தவிர்க்க உதவும். உத்தியோகத்தர்கள் வேலைகளில் கவனம் எடுக்க வேண்டும்.

**மகரம்** கீர்த்தியான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் புரிந்துணரர்வு அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்து இருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள்.

**கும்பம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும். வேலைக்குப் போகும் பெண்கள் சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

**மீனம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். வியயாபாரம் நன்கு செழிப்படையும். விவசாயம் நல்ல ஆதாயத்தைத் தரும். அரசாங்க வேலை பார்ப்போருக்கு கௌரவ பதவிகள் கிடைக்கும்.

**சந்திராஷ்டம நாள்: அசுவினி பரணி, கார்த்திகை 1 ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# இனவழிப்பு, போர்க்குற்றம் குறித்து இலங்கை மீது சர்வதேச விசாரணை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மே தினப் பிரகடனம்

யாழ்ப்பாணம், மே 03

தமிழ் மக்கள் மீதான இன வழிப்பு, போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றுக்குக் கொண்டு செல்லப்படல் வேண்டும் அல்லது சிறப்பு சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படல் வேண்டும் உள்ளிட்ட 15 உறுதிமொழிகளுடன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மே தினப் பிரகடனம் நேற்று முன்தினம் வெளயிடப்பட்டது.

நல்லூர் கிட்டு பூங்காவில் இடம்பெற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டத்திலேயே இந்தப் பிரகடனம் வெளியிட்டு வைக்கப் பட்டது.

அதன் முழு விவரம் வருமாறு:-

தமிழ் தேசிய விடுதலையையும் உழைக்கும் மக்களின் விடுதலையையும் வென்றெடுப்போம்!

உழைக்கும் மக்களின் விடுதலையைக் குறிக்கும் தினமாகவே மேதினம் கடைப்பிடிக்கப்படுகிறது. 1886ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் வேலை நேரக்குறைப்பு, ஊதிய அதிகரிப்பு, சங்கம் வைக்கும் உரிமை ஆகிய மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

எட்டு மணி நேர வேலை இதில் பிரதானமாக இருந்தது. அந்தப் போராட்டம் மீது பொலிஸார் தாக்குதலை மேற் கொண்டனர். தொழிலாளர்களின் வெண்சட்டைகள் செஞ்சட்டைகளாயின. அவர்களின் செங்குருதி சிக்காக்கோ நகரில் ஓடியது. இந்தத் தாக்குதலைக் கண்டித்து மே 3ஆம், 4ஆம் திகதிகளில் மாபெரும் ஆர்ப்பாட்டம் சிக்காக்கோ நகரில் இடம்பெற்றது.

பொலிஸார் அந்த ஆர்ப்பாட்டத்தில் குண்டொன்றை வெடிக்க வைத்தனர். ஏழு தொழிலாளர்களும் நான்கு பொலிஸாரும் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் காயமடைந்தனர். தொழிலாளர் தலைவர்கள் மீது பொய் வழக்குத் தொடரப்பட்டது. நான்கு தலைவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. ஏனையோருக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தூக்கு மேடையில் அந்தந்த தலைவர்கள் இறுதியாகக் கூறியவை 'எமது கல்லறைகளின் மௌனம் ஆயிரம் சொற்பொழிவுகளை விட அதிகமானது' என்பதே.

உழைக்கும் மக்களின் விடுதலைக்கான கோட்பாட்டைத் திரட்டித் தந்தவர் கால்மாக்ஸ். அவரது இணைபிரியா நண்பரான பிரடெறிக் ஏங்கெல்ஸ் தலைமையிலான தொழிலாளர்களின் சர்வதேசிய அமையம் மே முதலாம் திகதியைச் சர்வதேச தொழிலாளர் தினமாக பிரகடனம் செய்தது.

இன்றைய மே தினம் 132 ஆவது மேதினம் ஆகும். தமிழ் உழைக்கும் மக்களும் இதனை ஏற்று மே முதலாம் திகதியை உழைக்கும் மக்களின் விடுதலை தினமாகக் கடைப்பிடிக்கின்றனர்.

தமிழ் உழைக்கும் மக்கள் ஒரே நேரத்தில் வர்க்க ஒடுக்குமுறைக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் முகம் கொடுக்கின்றனர். தேசிய ஒடுக்கு முறை இதில் பிரதானமானது.

தேசிய விடுதலை கிடைக்கும் போதுதான் உழைக்கும் மக்களுக்கும் விடுதலை கிடைக்கும். உழைக்கும் மக்கள் விடுதலைக்கான உத்தரவாதத்தையும் தமிழ்த் தேசியத் தலைமை கொடுக்க வேண்டியது அவர்களின் மாபெரும் கடமையாகும்.

தமிழ்த்தேசியம் என்பது தேசிய விடுதலையை மட்டும் உள்ளடக்கியது மட்டுமல்ல சமூக விடுதலையையும் உள்ளடக்கியது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுப்பது தமிழ் தேசியம் தேசிய விடுதலையையும் சமூக விடுதலையையும் உள்ளடக்கியதே!

இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பது அழிக்கப்படுவது தான். அதாவது தமிழ்த் தேசத்தைத் தாங்கும் தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என்பது அழிக்கப்படுவதாகும்.

இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது எனச் சிங்கள தேசம் கருதுவதனாலேயே இந்த அழிப்பு மேற்கொள்ளப்படு கிறது. தமிழ் மக்களின் இது வரை காலப் போராட்டம் என்பது இவ் இன அழிப்பைத் தடுப்பதற்கான தற்காப்புப் போராட்டமேயாகும்.

தமிழ் மீனவர்களும், தமிழ் விவசாயிகளும், தமிழ் தொழிலாளர்களும் இவ் இன அழிப்பால் மிகவும் துன்பப்படுகின்றனர். தமிழர் தாயகத்தின் எல்லைப் புறங்களில் வசிக்கும் மக்களின் நிலை வார்த்தைகளுக்குள் அடங்குவன அல்ல.

எனவே இத்தொழிலாளர் தினத்தில் தமிழ்த் தேசத்தின் புதல்வர்களாகிய நாம் பின்வருவனவற்றை சபதமாக எடுத்துக் கொள்வோம்.

1) தமிழ் மக்கள் மீதான இன வழிப்பு, போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேசகுற்றவியல் நீதி மன்றுக்கு கொண்டு செல்லப்படல் வேண்டும் அல்லது சிறப்பு சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்படல் வேண்டும்.

2) தாயகம், தேசியம், சுய நிர்ணயம், தமிழ்த் தேசித்தின் தனித்துவமான இறைமை, என்பவற்றின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வாக இரண்டு தேசங்கள் ஒரு நாடு என்ற அடிப்படையிலான அரசியல் தீர்வை நோக்கி தமிழ்த் தேசத்தின் அரசியலை முன்னெடுப்போம்.

3) இலங்கைத் தீவை மையமாக வைத்து இடம் பெறும் புவிசார் அரசியல் போட்டியில் த[illegible]ர்களை வெறும் கருவியா[illegible]ப் பயன்படுத்தும் நிலை[illegible]கு முற்றுப்புள்ளி வைத்து, தமிழ் மக்களின் அரசியல் நலன்களுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் பேரம்பேசுவதன் மூலம் சர்வதேச சமூகத்துடனான உறவை மேம்படுத்தும் இராஜதந்திர நகர்வுகளை முன்னெடுப்போம்.

4) தினந்தோறும் இடம் பெறுகின்ற கட்டமைப்பு சார் இனவழிப்பைத் தடுக்க சர்வ, தேசப் பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்க குரல் கொடுப்போம்.

5) ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை அரசு உறுதியளித்தவாறு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி அந்தச் சட்டத்தின் கீழ் அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும்.

6) காணாமற்போனோர் விவகாரத்தை சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக்கி சர்வதேச விசாரணைக்காகக் குரல் கொடுப்போம்

7) மகாவலி அபிவிருத்தி வலயம் என்ற பெயரில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம் பெறும் சிங்கள பௌத்த் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்போம்.

8) தமிழர் தாயகத்தின் மீது இன அழிப்பை மேற்கொண்டதுடன், தாயகத்தை ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள அரச ஆயுதப்படைகள் முற்றாக வெளியேறவேண்டுமென குரல் கொடுப்போம்.

9) போரால் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள், பொது மக்களின் மேம்பாட்டுக்காக சமூகத்தை ஒருங்கிணைத்து செயலாற்றுவோம்.

10) தமிழ்ப் பெண்கள் அனைத்து ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற ஒன்றிணைந்து போராடுவோம்.

11) தமிழ்மக்களின் அனைத்து விவகாரங்களையும் உலகம் தழுவிய வகையில் கையாளக்கூடிய தேசிய அரசியல் இயக்கத்தைக் கட்டியெழுப்புவோம்.

12) நிலம், புலம்பெயர்ந்து வாழும் தேசம், தமிழகத்திற்கிடையே ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை உருவாக்குவோம்.

13) சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளுடனும் உலகம் வாழ் முற்போக்கு ஜனநாயக சக்திகளுடனும் நட்புறவுகளைப் பேணி ஒன்றாகக் கரங்கோர்ப்போம்.

14) மக்களை அரசியல் மயப்படுத்தி அமைப்பாக்குவதன் மூலம் மக்கள் பங்கேற்பு அரசியலை முன்னேற்றுவோம்.

15) நில உரிமை, வீட்டுரிமை உட்பட மலையக மக்களின் தேசிய உரிமைகளை உறுதிப்படுத்த குரல்கொடுப்போம். - என்றுள்ளது. (ஐ)

# மக்களின் இதயத் துடிப்பை உணர்ந்த மக்கள் நேய பயணத்துக்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்!– ஜனாதிபதி

மக்களின் இதயத் துடிப்பை உணர்ந்த மக்கள் நேயப் பயணத்துக்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் 25 ஆவது நினைவஞ்சலி நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மைத்திரி, அமரர் பிரேமதாஸவின் உருவச் சிலைக்கு மலர் செண்டு வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரி மேலும் தெரிவித்தவை வருமாறு:–

மக்கள் கனவுகளை மறந்து, தாங்களின் தனிப்பட்ட அரசியல் கனவுகளை நிறைவேற்றத் துடிக்கும் நிகழ்கால அரசியல் கலாசாரத்தினுள் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

தமது கனவை நிறைவேற்றுவதற்காக அன்றி மக்களின் கனவுகளை நனவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அவர், சுதந்திரமான ஜனநாயக சமுதாயத்தில் வலிமையற்ற, ஏழை மக்களின் வாழ்வை முன்னேற்றுவதற்கான அரசியல் கொள்கை மற்றும் நோக்கத்துடன் செயற்பட்ட சிறந்த தலைவராவார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசின் மீது நம்பிக்கை வைத்து மக்கள் அளித்த பொறுப்பு மற்றும் கடந்த அரசை மாற்றியமைப்பதற்காக மக்களிடம் காணப்பட்ட முயற்சி என்பவற்றைக் கருத்திற்கொண்டு அனைவரும் செயலாற்ற வேண்டும்.



முன்னர் இடம்பெற்ற தவறுகள் மீண்டும் ஏற்படாதவாறு சிறந்த ஆட்சி, சிறந்த சமூகம் மற்றும் தூய்மையான அரசியல் இயக்கம் மற்றும் எழை மக்களை நேசிக்கும், மக்களின் இதய துடிப்பை உணர்ந்த மக்கள்நேய பயணத்திற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்று ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

ரணசிங்க பிரேமதாஸவின் அரசியல் நோக்குத் தொடர்பான புரிந்துணர்வுடன் அவர் எதிர்பார்த்த சமூகப்பரிணாமங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்த நிகழ்வில் மகா சங்கத்தினர் உள்ளிட்ட சர்வ மதத் தலைவர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கருஜயசூரிய, அமைச்சர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஹேமா பிரேமதாஸ அம்மையார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (கு)

## அமித் உட்பட 27 பேருக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கண்டி திகன பகுதியில் கடந்த மாதம் ஏற்பட்ட கலவர நிலை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட அமித் வீரசிங்க உள்ளிட்ட 27 பேரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கண்டி திகன பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட அமித் வீரசிங்க உள்ளிட்ட 27 பேரின் விளக்கமறியலை தெல்தெனிய நீதிவான் நீதிமன்றம் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

## சமுர்த்தி பெறும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த பத்தாயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்!

கொழும்பு, மே 03

அனுராதபுரம் மாவட்டத்தில் வாழும் சமுர்த்தி பெறும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பத்தாயிரம் பாடசாலை மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

'சிப்-தொர' புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ஆயிரத்து 500 ரூபா புலமைப்பரிசில் வழங்கப்பட உள்ளது என மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் தமது பாடசாலைகளின் ஊடாக இதற்கான விண்ணப்பப் படிவங்களை அனுப்ப முடியும்.

இந்தத் திட்டத்தின் கீழ் முதல் நான்கு மாதத்திற்கான கொடுப்பனவை ஒரே முறையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

## சாதாரண தர விண்ணப்பங்கள் 15 ஆம் திகதி வரை ஏற்கப்படும்!

கொழும்பு, மே 03

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கான ஏப்ரல் 24 ஆம் திகதிக்கு முன்னதாகவே கிடைக்கும் வகையில் அந்தந்தப் பாடசாலைகளுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனத் திணைக்களம் அறிவித்துள்ளதோடு இதுவரை இந்த விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை எனின் திணைக்களத்தின் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு அறிவிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள், பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பதிவிறக்கம் செய்துக் கொள்ள முடியும்.

உரிய தினத்திலோ அதற்கு முன்னதாகவோ விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் வி.சனத் பூஜித்த அறிவித்துள்ளார்.

## மீன் பொதியிடல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 3 மாதங்களில் உயர்வு

கொழும்பு, மே 03

கடந்த மூன்று மாத காலப் பகுதியில் நாட்டின் மீன் பொதியிடல் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 34 இல் இருந்து 68 ஆக அதிகரித்திருக்கின்றன எனக் கடற்றொழில் நீரியில் வள அமைச்சு தெரிவித்துள்ளது.



ஐரோப்பிய ஒன்றியம் விதித்திருந்த மீன் ஏற்றுமதிக்கான தடையின் காரணமாக நாட்டின் மீன் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்திருந்தமையுடன் மீன் பொதியிடல் தொழிற்சாலைகள் பெருமளவு மூடப்பட்டும் இருந்தன.

இருப்பினும் கடந்த காலப்பகுதியில் மீன் ஏற்றுமதி மற்றும் அதன் மூலமான வருமானம் அதிகரித்ததைத் தொடர்ந்து மீன் பொதியிடல் தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டன.

நாட்டின் ஏற்றுமதி செய்யப்படும் டுனா மீனைப் போன்று இறால், நண்டு போன்றவற்றுக்கு சர்வதேசரீதியிலுள்ள கோரிக்கை அதிகரித்துள்ளன என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி!

கொழும்பு, மே 03

எமது நாட்டின் உழைக்கும் மக்களுக்காக் தமது கண்ணீரையும் இரத்தத்தையும் வியர்வையையும் சிந்தி, உயிர்த் தியாகங்களைச் செய்து சேவையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



சர்வதேசத் தொழிலாளர் தினத்துடன் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் எமது நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுத்து, தொழிற்சங்கங்களுக்கு உத்வேகத்தையும் புத்துணர்ச்சியையும் பெற்றுக் கொடுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்கள் பாராட்டி, பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

உழைக்கும் மக்களுக்காக அளப்பெரிய சேவைகளை ஆற்றிய, மே தினத்தை அரச விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட முன்னாள் பிரதமர் அமரர் எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க, அப்போதைய தொழிலமைச்சராகப் பதவிவகித்த டி.பி. இலங்கரத்ன மற்றும் கட்சியின் தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர்களான காலஞ்சென்ற ஆனந்த திஸநாயக்க, ஹார்பர்ட் விக்கிரமசிங்க, டீ.சி.வீரசேகர, பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர, அலவி மௌலானா உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் இதன்போது ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டனர்.

முன்னாள் தொழிற்சங்க தலைவர்களைப் பாராட்டி, குடும்ப உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி பரிசில்கள் வழங்கினார்.

இந்த நிகழ்வில் நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, சுசில் பிரேமஜயந்த, துமிந்த திஸாநாயக்க, மஹிந்த சமரசிங்க, டபிள்யு.டி.ஜே. செனவிரத்தின, சந்திம வீரக்கொடி, லசந்த அழகியவன்ன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் தொழிற்சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir











# மானிப்பாய் இந்துவுக்கு மூன்று மாடிக் கட்டடம்

## வடக்கு ஆளுநர் அடிக்கல்

யாழ்ப்பாணம்,மே 03

மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே பிரதம விருந்தினராகக் கலந்து கட்டடத்துக்கான அடிக்கல்லை நேற்று நட்டு வைத்தார்.

'அருகில் பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் வேலைத்திட்டம் ஊடாக மத்திய அரசாங்கம் 35 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

பாடசாலை அதிபர் இந்திரபாலா தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ஆளுநரின் செயலர் எல்.இளங்கோவன், பிரதேச சபைத் தலைவர், பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)







# பேசாலையில் தொழிலாளரின் புனிதராம் சூசையப்பர் விழா

மன்னார் பேசாலைப் பகுதியில் மீனவர்கள் செறிந்து வாழும் கடற்கரையோரப் பகுதியில் கத்தோலிக்க விசுவாசிகளின் தொழிலாளர்களின் தந்தையென போற்றப்படும் புனித சூசையப்பருக்கு அமைக்கப்பட்ட சிற்றாலயத்தை பங்கு தந்தை அருட்பணியாளர் பெனோ அடிகள் மன்னார் மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குநனர் அருட்பணி பி.செ.றெஜினோல்ட் அடிகளார்கள் அர்ச்சித்து திறந்து வைத்தபின் திருப்பலி ஒப்புக் கொடுக்கின்றமையையும் கடல் திருச் சுரூபத்தால் ஆசீர்வதிக்கின்றமையையும் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# தேறாங்கண்டல் அ.த.க.வில் வகுப்பறைத் தொகுதி திறப்பு






முல்லைத்தீவு, மே.03

முல்லைத்தீவு - துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தேறாங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதியில் கட்டப்பட்ட வகுப்பறைத் தொகுதி மற்றும் ஆசிரியர் விடுதி என்பன கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, கலாசார அலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், விருந்தினர்களாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பொன்னையா ரவிச்சந்திரன், மாங்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எந்திரி.ந.சிறீஸ்கந்தராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.(ஐ)





வவுனியா இறம்பைக்குளம் ஸ்ரீ கருமாரி நாகபூசணி அம்பாள் ஆலய தீர்த்தக்கேணிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஏராளமான அம்பாளின் பக்தர்கள் கலந்து கொண்டனர்.









உலகத் தொழிலாளர் தினமாகிய மே தினத்தை இலங்கை ஆசிரியர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம் என்பவற்றுடன் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இணைந்து யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை அனுஷ்டித்தன.

அதில் சமூக விஞ்ஞான ஆய்வு மையத்தைச் சேர்ந்த அ.ஜோதிலிங்கம், பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.கலாராஜ், இலங்கை ஆசிரியர் சங்க உப தலைவர்களில் ஒருவரான ஆ.திலீபன் திலீசன் ஆகியோர் உரையாற்றினர்.

# தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்க வழி ஏற்படுமா?

## இன்று சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம்

சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினம் இன்று மே மாதம் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை கொண்டாடப்படுகின்றது.

பத்திரிகை நிறுவனங்கள், அல்லது ஊடக நிறுவனங்கள் செய்திகளை, கருத்துக்களைச் சுதந்திரமாக எவ்வித அச்சுறுத்தல்களும் தடைகளுமின்றி மக்களுக்கு வெளியிடுவதைப் பத்திரிகைச் சுதந்திரம் என்று நாம் வரைவிலக்கணப்படுத்த முடியும்.

அதாவது உலகில் இடம்பெறும் அரசியல், பொருளாதார மாற்றங்கள், குற்றச்செயல்கள், சமூக விடயங்கள், பாதுகாப்பு விவகாரங்கள், மனித உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்த செய்திகளை வெளியிடுவதற்கு ஊடக நிறுவனங்களுக்கு இருக்க வேண்டிய சுதந்திரமே இந்தச் சர்வதேச ஊடக சுதந்திர தினத்தில் வலியுறுத்தப்படுகிறது.

இந்நிலையில் ஊடக சுதந்திரத்தைப் பொறுத்தவரையில் எமது நாட்டு நிலைமைகளை ஆராயவேண்டியது இங்கு

> தற்போது நாட்டில் ஒரு ஆக்கபூர்வமான அரசியல் சூழல் உருவாகியுள்ள நிலையில் ஊடகவியலாளர்களும் தமது பணிகளை தடைகள் இன்றி முன்னெடுக்கும் நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். இதனை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் தொடர்பான துன்பகரமான நிகழ்வுகள் இதன்பின்னர் இடம்பெறக்கூடாது.


அவசியமானதாகும். ஊடக சுதந்திரம் எனும் போது உலக நாடுகளின் வரிசையில் இலங்கை 141 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் 192 நாடுகள் அங்கம் வகிக்கின்ற நிலையில் அவற்றில் இலங்கையானது ஊடக சுதந்திரம் என்ற பிரிவில் 141 ஆவது இடத்தில் உள்ளது.

ஒரு ஊடகவிலயாளர் பல்வேறு தடைகளையும் அச்சுறுத்தல்களையும் துன்ப துயரங்களையும்எதிர்கொண்ட வண்ணமே சமூக நலனைக் கருத்தில் கொண்டு ஊடகப்பணியில் ஈடுபட்டு வருகின்றார். எமது நாட்டைப் பொறுத்த வரை யில் அவ்வாறு பெரிய சவால்களுக்கு மத்தியில் சமூகத்திற்காகச் சேவையாற்றும் ஊடகவியலாளர்கள் கடந்த காலங்களில் – விசேடமாக யுத்த காலகட்டத்தில் – எதிர் கொண்ட அச்சுறுத்தல்கள் ஏராளம். அதுமட்டுமன்றி பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டமை மற்றும் கொலை செய் யப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு துன்ப கரமான நிகழ்வுகள் கடந்த காலங்களில் இலங்கையில் பதிவாகியிருந்தன. எமது நாட்டில் கடந்த 17 வருடகாலத்தில் 19 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனப் பதிவுகள் கூறுகின்றன.

விசேடமாக தமிழ் ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் தராக்கி என பிரபுலமாக அறியப்பட்ட சிவராம், ஐயாத்துரை நடேசன், செல்வராஜா ரஜிவர்மன், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், பரனி ரூபசிங்கம் தேவகுமார், சுபாஷ் சந்திரபோஷ், நிமலராஜன், ரேலங்கி செல்வராஜா உள்ளிட்ட பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். 2008 ஆம் ஆண்டு சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



1990 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் ரிச்சட் டீசொய்சா சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டிருந்தார். அத்துடன் பல ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு காணாமற் போயினர். ஒரு சில ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டு பின்னர் கடும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.



கருத்துப்பட ஓவியராக கடமையாற்றிய ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட 2010 ஆம் ஆண்டு காணாமற்போன நிலையில் அவருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இதுவரை எந்த தகவலும் இல்லாமல் இருக்கின்றது.

ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி ஊடகப் பணியாளர்களும் ஊடக நிறுவனங்களில் பணிபுரிந்த உத்தியோகத்தர்களும் இனந்தெரியாதோரின் தாக்குதல்களுக்குப் பலியாகிய மற்றும் காயமடைந்த சம்பவங்களும் இலங்கையில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் இனந்தெரியாதவர்களினால் பல ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்குள்ளான சம்பவங்களும் பதிவாகியிருந்தன. பல ஊடக நிறுவனங்களும் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு கடந்த காலங்களில் உட்பட்டன.



இலங்கையைப் பொறுத்த வரையில் ஊடகவியலாளர் பணி என்பது பெரிய சவாலுக்குட்பட்டதாகவே காணப்படுகின்றது. குறிப்பாக முப்பது வருட யுத்த காலத்தில் ஊடகவியலாளர்கள் எதிர்கொண்ட துன்ப, துயரங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள், இடையூறுகள் என்பன வார்த்தைகளினால் விவரிக்க முடியாத வையாகும். அந்தளவிற்கு அச்சுறுத்தல்களையும் சவால்களையும் எதிர்கொண்ட வண்ணமே ஊடகவியலாளர்கள் தமது பணிகளை முன்னெடுத்து வந்துள்ளனர்.

கடந்த காலங்களில் குறிப்பாக தமிழ், ஊடகவியலாளர்களுக்கு நிகழ்ந்த கொடூரங்களையும், அச்சுறுத்தல்களையும், பட்டியலிட்டுக்கொண்டே போகலாம். அந்தளவிற்கு சவால்மிக்கதாகவே ஊடகவியலாளர்களின் பணி காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் கொல்லப்பட்ட மற்றும் தாக்குதலுக்குள்ளான தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பான விசாரணைகள் எதுவும் இதுவரை முழுமை பெற்றதாக தெரியவில்லை. குறிப்பாக சிவராம், ஜி. நடேசன், சுகிர்தராஜன் உள்ளிட்டோரை கொலை செய்தவர்கள் இதுவரை சட்டத்தின் முன் கொண்டுவரப்படவில்லை. விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அரசாங்கம் கூறி வந்தாலும், அவற்றில் முன்னேற்றமிருப்பதாக தெரியவில்லை.

கடந்த காலங்களில் நாட்டில் ஊடக சுதந்திரம் என்பது பேச்சளவிலேயே காணப்பட்டு வந்தது. சமூகப் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களைகையாண்ட ஊடகவியலாளர்கள், அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட நிலைமையே கடந்த காலங்களில் காணப்பட்டது. இந்நிலையில் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாட்டின் ஊடக சுதந்திர விடயத்தில் குறிப்பிடத்தக்க ஆக்கப்பூர்வமான மாற்றம் ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். குறிப்பாகத் தகவல் அறியும் சட்டமூலமானது அரசமைப்பின் அடிப்படை விடயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



அந்த வகையில் கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் தற்போது ஊடக சுதந்திரத்தைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க அளவு திருப்தியடையும் நிலையில் நாம் இருக்கின்றோம்.

ஆனால் இன்னும் இந்த விடயத்தில் முன்னேற்றம் காணப்படவேண்டியுள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் கொலை, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் காணாமல் போன ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் கொண்டுவரப்படவேண்டும். சமூகப் பிரச்சினைகள் மற்றும் உண்மைகளை வெளிக்கொண்டுவந்தமைக்காக சில ஊடகவியலாளர்கள் சமூகவிரோதிகளின் ஆயுதங்களுக்கு இரையாகியுள்ளனர். இவ்வாறான சம்பவங்களுக்கு எந்த வொருவகையிலும் இடமளிக்கக் கூடாது. கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணை நடத்தப் பட்டு சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்ட குறித்த ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு தேவையான உதவிகளைச் செய்துகொடுக்க வேண்டியதும் அவசியமாகும்.

அதுமட்டுமன்றி கடந்த காலங்களில் தாக்குதலுக்குள்ளான ஊடக நிறுவனங்களுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். ஊடகவியலாளர்கள் தமது பணியை சுதந்திரத்துடனும் அச்சு றுத்தல்கள், தடைகள் இன்றியும் முன் னெடுப்பதற்கு தேவையான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

மேலும் ஊடகவியலாளர்களும் தமது தொழில் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் சுய தணிக்கையுடனும் பக்கச்சார்பின்றியும் தமது தொழில்சார் தன்மையைப் பேணும் வகையில் செயற்பட வேண்டும். எந்தவொரு கட்டத்திலும் தமது தொழில் கௌரவம் பாதிக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிக்கக் கூடாது.

தற்போது நாட்டில் ஒரு ஆக்கபூர்வமான அரசியல் சூழல் உருவாகியுள்ள நிலையில் ஊடகவியலாளர்களும் தமது பணிகளை தடைகள் இன்றி முன்னெடுக்கும் நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். இதனை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் தொடர்பான துன்பகரமான நிகழ்வுகள் இதன்பின்னர் இடம்பெறக்கூடாது.

ஊடக சுதந்திரத்தில் இலங்கை உலக நாடுகள் வரிசையில் மிகவும் உயர்ந்த மட்டத்திற்கு வரவேண்டியது அவசியமாகும். அவ்வாறானதொரு சிறந்தவகையிலான ஊடக சுதந்திரத்தை நோக்கி எமது நாடு பயணிக்கவேண்டும். அதற்கு ஊடகவியலாளர்களுக்கும் தமது பங்களிப்பை உரிய முறையில் வழங்கவேண்டும் என்பதுடன் அதகேற்ற சூழலை உருவாக்குவதில் அரசாங்கமும் அர்ப்பணிப்புடன் செயற்படு அவசியம் என்பதை வலியுறுத்துகின்றோம். *



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5

பகுதி - I

31

26. 12 பிள்ளைகளில் 8 பேரிடம் மாம்பழங்கள் உண்டு. 7 பேரிடம் தோடம்பழங்கள் உள்ளது. எல்லோரிடமும் மாம்பழம் அல்லது தோடம்பழம் உள்ளது. சிலரிடம் இரண்டு வகையான பழங்களும் உண்டு. அதன் படிவகையான பழங்களையும் வைத்திருப்பவரின் எண்ணிக்கை?
1. 3 2. 4 3. 5

27. சுதன் காலையில் பாடசாலைக்கு செல்லும்போது அவனது நிழல் அவனுக்கு முன்னால் விழுந்தது எனின், அவன் செல்லும் திசை யாது?
1.மேற்கு 2. கிழக்கு 3. வடக்கு

28. சரியாக எழுதப்பட்டுள்ள கோவையைத் தெரிவு செய்க
1. 6 × 6 - 6 = 24 + 6 2. 7 × 6 + 6 = 10 × 5
3. 3 × 12+ 4 = 8 × 5

29. ஐம்பது நிமிடங்களுக்கு ஒருதடவை ஒலிக்கும் ஒரு கடிகாரம் உள்ளது. அது மூன்றாவது தடைவ மு.ப 9.10 இற்கு ஒலித்தது எனின், முதல் தடவை ஒலித்த நேரம் என்ன?
1. மு.ப 8.20 2. மு.ப 7.30 3.மு.ப 7.40

கீழ்வரும் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் அட்டவணையை பயன்படுத்துக

| பறவைகள் | விலங்குகள் | ஊர்வன |
|---|---|---|
| கிளி | மான் | நத்தை |
| குயில் | .........B............ | பாம்பு |
| ............A......... | நரி | ..........C......... |

30. இடைவெளி A இல் வரவேண்டியது
1. குரங்கு 2.நாய் 3. மைனா

31. இடைவெளி B இல் வரவேண்டியது
1. காகம் 2. யானை 3. பல்லி

32. இடைவெளி C இல் வரவேண்டியது
1.ஓணான் 2. புளுனி 3.மரை

33. 24 cm இச் செவ்வக அட்டையில் இருந்து ஒரு பக்கநீளம் 3 cm கொண்ட 12 cm கட்டங்களை வெட்டி எடுக்க முடியும்?




1. 08
2. 16
3. 12


34. நிரோசன் தன்னிடம் இருந்த பணத்தில் ½ பங்கை ஆடைக்கும் அதன் பின்னர் அவன் மிகுதியை இரு சம பகுதிகளாகப் பிரித்து அதில் ஒரு பங்கை சாப்பாட்டிற்கு செலவிட்டான். மிகுதியாக இருந்த பணம் ரூபாய் 50 எனின் அவரிடம் இருந்த மொத்தப் பணம் எவ்வளவு ?
1. ரு 50 2.ரு 100 3.ரு 200

35. தற்போது குமரனின் வயது 24 வருடங்கள் ஆகும். அவனுடைய வயது சகோதரனின் வயதின் நான்கு மடங்காகும். எனின் தற்போது சகோதரனின் வயது என்ன?
1. 12 2. 6

36. மலர்கள், காலையில் மலரும் பூக்கள். இரவில் மலரும் பூக்கள் இச் சொற்களின் தொடர்பை காட்டும் உரு




37. இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?



1. 9
2. 10
3. 8

38. வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

| கடதாசி | புத்தகம் |
|---|---|

| ஈர்க்கு | |
|---|---|

1. துடைப்பான் 2. விளக்குமாறு 3. தென்னை

39. 10 பேரிற்கு தேநீர் தயாரிக்க 2 லீற்றர் பால் வேண்டும். ஒரு விருந்திற்கு 50 பேர் வந்தனர் எனின் அவர்களுக்கு தேநீர் தயாரிக்க எத்தனை லீற்றர் பால் தேவை?
1. 10 லீற்றர் 2. 12 லீற்றர் 3. 8 லீற்றர்






நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்துவை முழுப் படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை. முதல் படி ஏறு.

- மார்டின் லூதர் கிங் -



## நிறம் தீட்டலாம் வாங்க





## பொய்யின் மதிப்பு

ஒரு நாள் அயல்நாட்டில் இருந்து வந்த இரண்டு கல்விமான்கள் முல்லாவைச் சந்தித்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அந்தக் கல்விமான்களில் ஒருவர் முல்லாவை நோக்கி முல்லா அவர்களே! உலகத்தில் பொய்யைக் காட்டிலும் உண்மையின் மதிப்பு அதிகமாக இருக்கிறது, அது ஏன் ? என ஒரு சந்தேகத்தைக் கேட்டார்.

நானும் உம்மை ஒரு கேள்வி கேட்கிறேன் உலகத்தின் இரும்பை விடத் தங்கத்துக்கு அதிக மதிப்பு இருக்கிறதே. அது ஏன் ? என்று பதில் கேள்வி கேட்டார் முல்லா.

உலகத்தில் இரும்பு தாரளமாக எங்கும் கிடைக்கிறது. அதனால் இரும்பின் மதிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. தங்கமோ உலகத்தில் மிகவும் அரிதாகத்தான் எங்காவது ஓரிடத்தில் கிடைக்கிறது. அதனால்தான் தங்கத்தின் மதிப்பு அதிகமாக இருக்கிறது என்றார் கல்விமான்.

பொய்க்கும் உண்மைக்கும் இந்த உதாரணமும் பொருந்தும். பொய் உலகத்தில் யாரிடமும் தாராளமாக் கிடைக்கிறது. ஆனால் உண்மைபேசுபவர்களைக் கண்டு பிடிப்பதுதான் அரிதாக இருக்கிறது. இவ்வாறு உண்மை எளிதில் கிடைக்காத பொருளாக இருப்பதால்தான் அதற்கு அதிகமான மதிப்பு இருக்கிறது என்று முல்லா பதில் சொன்னார்.

அந்த விளக்கத்தைக் கேட்டு கல்விமான்கள் இருவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.



படத்தில் ஒளிந்திருக்கும் எண்களை கண்டு பிடியுங்கள்?



### தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.


முகவரி : 'காலைக்கதிர்'
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# கிளிநொச்சி அரச நிர்வாகத்திற்கு எதிராக இரணைதீவு கிராம மக்கள் முறைப்பாடு!

கிளிநொச்சி, மே 03

கிளிநொச்சி இரணைதீவு கிராம மக்கள் தங்களைச் சொந்த மண்ணில் மீள்குடியேற்றம் செய்யக் கோரி ஆராம்பித்த போராட்டத்துக்கு நேற்றுமுன்தினம் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது.

இந்த நிலையில், தமது போராட்டம் தொடர்பாகக் கரிசனை கொள்ளாத அரச நிர்வாகத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் உள்ள மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்யவுள்ளோம் என இரணைதீவு மக்கள் தெரிவித்தனர்.



கிளிநொச்சி இரணைதீவு கிராம மக்கள் 1992 ஆம் ஆண்டு தமது சொந்த மண்ணில் இருந்து இடம்பெயர்ந்து சென்று முழங்காவில் கிராமத்தில் உள்ள 'இரணை மாதா' கிராமத்தில் குடியேறினர்.

சுமார் 183 குடும்பங்கள் கடந்த 27 வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்துள்ள நிலையில் தற்போது 400 குடும்பங்களுக்கு மேலாகத் தமது சொந்த இடத்தை விட்டு நிர்க்கதியான நிலையில் முழங்காவில் கிராமத்தில் உள்ள 'இரணை மாதா' கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

தமது சொந்த மண்ணில் மீள்குடியேற்றம் செய்யக் கோரி சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக போராட்டத்தைத் தொடர்ந்த அந்தக் கிராம மக்கள் தமது சொந்த நிலமான 'இரணைதீவு' கிராமத்துக்குக் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை படகுகள் மூலம் சென்று ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட மக்கள் இரணை தீவில் குடியேறி 8 நாள்கள் ஆகியும் குறிப்பிட்ட பிரச்சினைகளுடன் சம்மந்தப்பட்ட எந்த ஒரு அரச திணைக்களங்கள், அரச அதிகாரிகளோ யாரும் தங்களுடன் எந்த ஒரு பேச்சுக்கும் வரவில்லை என அந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும், இரணை தீவில் வசிக்கும் கடற்படையினர் கூட எந்தவித சமரசத்திற்கும் வரவில்லை எனவும், அந்தத் தீவில் தாம் தனித்து விடப்பட்ட அனாதைகள் போல் தற்காலிகக் குடிசைகளை அமைத்து ஒழுங்கான குடிதண்ணீர் இன்றி உணவு இன்றி வசித்து வருகின்றோம் என்றும் அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.



தங்களுக்குரிய நிலங்கள் தங்களுக்கு வழங்கப்படும் வரை தீவைவிட்டுப்போகப்போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த மக்களுக்கு ஆதரவு தெரிவித்து மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான அமைப்பின் தலைவர் ஜே.ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழு அங்கு சென்று மக்களின் உரிமை சார் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியமையுடன் அவர்களுக்குத் தேவையான மருத்துவப் பொருள்களையும் வழங்கியது.

அதற்கு அமைவாகச் சுமார் 400 குடும்பங்கள் வரை இரணைதீவு கிராமத்தில் தங்கியிருந்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக தங்களுக்கு நல்ல முடிவைத் தர வேண்டும் எனவும் தராதபட்சத்தில் தங்கள் போராட்டம் ஒருபோதும் ஓயாது எனவும் தெரிவித்த மக்கள், தங்கள் போராட்டம் தொடர்பாகக் கரிசனை கொள்ளாத அரச நிர்வாகத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்யவுள்ளனர்.

# கேரளாக் கஞ்சாவுடன் 3 சந்தேக நபர்கள் கைது



கொழும்பு, மே 03

தலவாக்கலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை ஒலிரூட் பகுதியில் வீடு ஒன்றில் விற்பனைக்காக வைத்திருந்த 300 கிராம் கேரளா கஞ்சாவுடன் மூன்று சந்தேக நபர்கள் நேற்று முற்பகல் 10 மணியளவில் தல்வாக்கலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நடந்த சோதனையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தலவாக்கலை, ஒலிரூட் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்கள் நீண்ட காலமாகக் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளனர் எனவும் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இதில் ஒருவர் விற்பனை செய்பவர் என்றும், ஏனைய இருவரும் வாங்கச் சென்றவர்கள் எனவும் பொலிஸார் மேலும் கூறினர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணையின் பின்னர் நுவரெலியா நீதிவான் முன்னிலையில் ஆஜப்படுத்தப்படவுள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை - சீனா வர்த்தக உறவுகளை வளர்ப்பது தொடர்பில் ஆலோசனை!

கொழும்பு, மே 03

கடந்த ஆண்டு இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் இடம்பெற்ற வர்த்தகத்தின் மொத்தப் பெறுமதி 460 கோடி டொலரை எட்டியது என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் இது மூன்று சதவீத அதிகரிப்பு என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீனவர்த்தகத் தூதுக் குழுவுடனான கலந்துரையாடலில் அவர் இது தொடர்பிலான புள்ளிவிவரங்களை அறிவித்தார்.

அடுத்த மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை சீனாவின் யுனான் மாநிலத்தில் நடைபெறவுள்ள கண்காட்சியில் கலந்து கொள்ளுமாறு சீனத்தூதுக் குழு அமைச்சர் ரிஷாத் பதியுதீனிடம் கோரிக்கை விடுத்தது. இதனுடன் இணைந்ததாக கும்மிங் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தக மாநாடும் இடம் பெறவுள்ளது.

இந்த மாநாட்டின் ஊடாக இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்குச் சீன சந்தையில் ஸ்திரமான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

யுனான் மாநிலத்தில் கூட்டு வர்த்தக முயற்சிகளில் முதலீடு செய்வதன் மூலம் புதிய வர்த்தகங்களை ஆரம்பிக்க இலங்கை முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு



கிடைக்கும் என சீனத் தூதுக் குழுவின் அங்கத்தவர் ஷஒஷஒன் காவோ தெரிவித்தார்.

தமது மாநில அரசாங்கம் விவசாயம், ஔடத உற்பத்தி, சுற்றுலாத் துறை, தாவர இனப்பெருக்கம் முதலான துறைகளில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராக இருக்கிறது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் இன்று!

கொழும்பு, மே 03

கட்சித்தலைவர்களின் விசேட கூட்டம் ஒன்று சபாநாயகர் கருஜயசூரியவின் தலைமையில் இன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என நாடாளுமன்றின் பிரதிப் பொதுச் செயலாளர் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதனை இன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

புதிய நாடாளுமன்ற அமர்வு எதிர்வரும் 08 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளத்துடன் இந்த நாடாளுமன்ற அமர்வு தொடர்பில் இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அறிவித்தப்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்றின் பிரதிப் பொதுச் செயலாளர் நீல் இத்தவெல மேலும் கூறினார்.

# ஹேவாகம போதிராஜ ஆச்சிரமத்தின் புதிய விகாரை ஜனாதிபதி தலைமையில் திறப்பு!



கொழும்பு, மே 03

கடுவெல, ஹேவாகம போதிராஜ ஆச்சிரமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரையைத் திறந்து வைக்கும் புண்ணிய நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

புதிய விகாரையை நேற்றுமுன்தினம் பிற்பகல் திறந்து வைத்த ஜனாதிபதி, சமய அனுஷ்டானங்களில் பங்குபற்றினார்.

வண. கிரிபத்கொட ஞானநந்த தேரரின் வழிகாட்டலில் 2005 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கடுவெல மஹமெவ்னா போதிஞான தியான நிலையம் பிரதேச மக்களுக்கு ஆன்மிக வழிகாட்டல்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிகழ்வில் வண. தொடம்பஹல ராஹுல தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினரும் அமைச்சர்கள் விஜயதாச ராஜபக்ஷ, பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோரும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரனசிங்க, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் பெருந்தொகையான பிரதேச மக்களும் பக்தர்களும் கலந்துகொண்டனர்.

(கு)

# போகோஹராம் நைஜீரியப் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக உயர்வு

நைஜர், மே 02

நைஜீரியாவில் நேற்று முன்தினம் போகோஹராம் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளது.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமியச் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியைக்கொண்டு வர வேண்டும் என்று போகோஹராம் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் கிராமங்களுக்குள் கும்பலாக நுழையும் இவர்கள், அங்குள்ள மக்களை ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொன்று குவிக்கின்றனர்.



இதனிடையே, நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் போர்னோ மாவட்டத் தலைநகரான மைடுகுரி நகரை ஒட்டியுள்ள ஆடமாவா மாநிலத்திற்கு உட்பட்ட முபி நகரில் உள்ள மசூதி அருகே நேற்று முன்தினம் போகோஹராம் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 20 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர் என முதல்கட்டத் தகவல்கள் வெளியாகின. மேலும் இந்தத் தாக்குதலில் பலர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில், போகோஹராம் பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் உயிரிழந்ததோர் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

## பாகிஸ்தானில் துப்பாக்கிச் சண்டையில் பயங்கரவாத இயக்கத் தலைவர் பலி



குவெட்டா, ம 03

பாகிஸ்தானில்ராணுவத்துக்கும், லஷ்கர் இஜாங்வி பயங்கரவாத இயக்கத்தினருக்கும்இடையேயான துப்பாக்கிச்சண்டையில் அந்த இயக்கத்தின் முக்கிய தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட லஷ்கர் இ ஜாங்வி பயங்கரவாத இயக்கத்தினர் ஸ்பிளிங்லி, காபு மலைப் பகுதிகளில் பதுங்கி இருக்கின்றனர் எனப் பாதுகாப்புப் படையினருக்குரகசியத்தகவல்கள் கிடைத்துள்ளன.

இதையடுத்து எல்லை பாதுகாப்புப் படையினரும், பொலிஸ் படையினரும் அந்தப் பகுதிகளை கூட்டாகச் சென்று சுற்றி வளைத்தனர்.

எல்லைபாதுகாப்புபடையினரின் வாகனத்தை பார்த்ததுமே பயங்கரவாதிகள் சரமாரியாகத் துப்பாக்கியால் சுடத் தொடங்கினர்.

இரு தரப்பினருக்கும் இடையே பல மணி நேரம் பலத்த துப்பாக்கிச்சண்டை நடந்தது. இந்தச் சண்டையின் முடிவில், லஷ்கர் இ ஜாங்வி பயங்கரவாத இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான மக்சூத் அகமது குண்டு பாய்ந்து பலியாகியுள்ளார்.

இது தொடர்பாக குவெட்டா பொலிஸ் ஐ.ஜி. அப்துல் ரசாக் சீமா ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்:-


பயங்கரவாதிகள்பதுங்கி இருப்பது குறித்து தகவல் அறிந்ததும் 3 நாள்களுக்கு முன்பாக அந்தப் பகுதிகளைச் சுற்றி வளைத்தோம்.

இந்த துப்பாக்கிச்சண்டையில்லஷ்கர் இஜாங்வி பயங்கரவாத இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரும், மாங்கோபிர் பகுதியை சேர்ந்தவருமான மக்சூத் அகமது கொல்லப்பட்டார்.

கராச்சியிலும், அதன் சுற்றுவட்டாரங்களிலும் நடந்த பல பயங்கரவாத தாக்குதல்களில் தொடர்பு உடையவர் இந்த மக்சூத் அகமது. ஏராளமான ஆயுதங்களும், வெடிபொருள்களும் சிக்கி உள்ளன. பயங்கரவாதிகளை தேடும் வேட்டை தொடர்ந்து இடம் பெற்று வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அணு ஆயுதத் தளம் மூடப்படுவதை உறுதி செய்ய ஐக்கிய நாடுகள் சபைக்கு தென்கொரியா அழைப்பு!

வடகொரியாவின் அணு ஆயுத தளம் மூடப்படுவதை நேரில் சென்று உறுதி செய்து கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபைக்கு தென்கொரியா ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.



ஐ.நா. சபை தீர்மானங்களை மீறி, உலக நாடுகளின் எதிர்ப்புக்கு இடையே 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து அணு ஆயுத திட்டங்களை நிறைவேற்றி வந்த வடகொரியா, இப்போது அவற்றை கைவிடுவதாக அறிவித்து உள்ளது.

கடந்த 21 ஆம் திகதி முதல் அந்த நாடு அணு ஆயுதத் திட்டங்களை செயல்படுத்துவதை முடிவுக்கு கொண்டு வந்து விடுகிறோம் என அறிவித்துள்ளது. இந்த மாதத்தில் வடகொரியாவின் புங்கியே-ரி அணு ஆயுதப் பரிசோதனை தளம் மூடப்பட்டு விடும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதில் முக்கிய பங்காற்றி வருகின்ற தென்கொரியாவின் ஜனாதிபதி மூன் ஜே இன், ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டரெசுடன் நேற்று முன்தினம் தொலைபேசியில் பேசினார்.

அப்போது அவர், வடகொரியாவின் அணு ஆயுததளம் மூடப்படுவதை ஐ.நா. சபையின் சார்பில் நேரில் சென்று உறுதி செய்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்.

இந்தத் தகவலை தென்கொரியாவின் யோன்ஹாப் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## குட்டி இளவரசரை பார்க்கச் சென்ற பிரித்தானிய மகாராணி எலிசபெத்



புதிதாக பிறந்துள்ள குட்டி இளவரசர் லூயிஸைப் பார்ப்பதற்காக பிரித்தானிய மகாராணி வெஷிங்கடன் அரண்மனைக்குச் சென்றுள்ளார்.

குட்டி இளவரசர் பிறந்து 9 நாள்கள் ஆகிவிட்டன. தனது பணி காரணமாக மகாராணி எலிசபெத், குட்டி இளவரசரை இதுவரை சென்று பார்க்கவில்லை.

இந்த நிலையில், நேற்று முதல் முறையாகக் குட்டி இளவரசரைப் பார்க்கத் தனி விமானத்தின் மூலம் பிரித்தானிய மகாராணி சென்சிங்ரன் அரண்மனைக்குச் சென்ற புகைப்படம் வெளியாகியுள்ளது.

## விமானத்துக்குள் காற்று வாங்க அவசரக் கதவைத் திறந்த பயணி





பீஜிங், ம 03

சீனாவின் சென்ஜென்விமானநிலையத்தில் இருந்து பயணிகள் விமானம் ஒன்று புறப்படுவதற்குத் தயார் நிலையில் இருந்தது. விமானம் சரியாகப் புறப்படும் சமயத்தில் சென் (வயது 25) என்ற நபர் விமானத்தின் அவசரக் கதவுகளைத் திறந்து இருக்கிறார்.

அவசர வழியில் வெளியே செல்ல அவர் முயற்சி செய்து இருக்கிறார். இதைப் பார்த்த விமான பணிப் பெண்கள் உடனடியாக, விமான அதிகாரிகளுக்குத் தகவல்கொடுத்தார்கள். பின் விமானிக்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டு விமானம் நிறுத்தப்பட்டது. இதனால் மூன்றுக்கும் மேற்பட்ட விமானங்கள் புறப்படுவதில் காலதாமதம் ஆனது.

இந்நிலையில், அவசர கதவைத் திறந்ததற்கு அவர் விளக்கம் அளித்துள்ளார்.

விமானத்தினுள் காற்று இல்லாமல் புழுக்கம் அதிகமாக இருந்தது என்றும் இதையடுத்து ஜன்னலை திறப்பதாக நினைத்துக் கொண்டு அவசரக் கதவுகளை தவறுதலாகத் திறந்தேன் என்றும் அவர் கூறியுள்ளார். கதவைத் திறந்த பின்தான் அது அவசர வழி என்று தெரியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## கனடாவில் சட்டவிரோதமாக நுழையும் நைஜீரியர்கள்!

கனடாவில் சமீபகாலமாகச் சட்ட விரோதமாக நுழையும் நைஜீரியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது எனத் தெரியவந்துள்ளது.

சுற்றுலா விசாவின் மூலம் அமெரிக்காவுக்குள் நுழையும் நைஜீரியர்கள், அங்கு சில காலம் தங்கியவுடன் சட்ட விரோதமாகக் கனடாவுக்குள் நுழைகின்றனர்.

கனடா மட்டுமே அவர்களது குறிக்கோளாக உள்ள நிலையில், அமெரிக்கா சுற்றுலா விசாவை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது.

எனவே, நைஜீரியாவில் உள்ள



கனடா அதிகாரிகள், சுற்றுலா விசா வழங்குவது குறித்து, கடும் நடவடிக்கைகளை எடுக்க முடிவெடுத்துள்ளனர்.

இதுகுறித்து குடிவரவுத்துறை அமைச்சரின் தகவல் தொடர்பு பேச்சாளர் தெரிவிக்கையில்:-

கனடாவில் தஞ்சமடைவதற்காக அமெரிக்கா விசாவை தவறாகப் பயன்படுத்திவருகின்றனர். இதற்காக அமெரிக்க அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

போகோஹராம்போன்றதீவிரவாத குழுக்களின் நடவடிக்கைகளால் பெரும்பாலான நைஜீரியர்கள் தாய் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காவிரி விவகாரத்தில் மத்திய அரசின் மனுவை உடனே விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு!

காவிரி விவகாரத்தில் கூடுதல் அவகாசம் கோருவது தொடர்பாக மத்திய அரசு தாக்கல் செய்த இடைக்கால மனுவை உடனடியாக விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துள்ளது.

காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பை நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டத்தை (ஸ்கீம்) உருவாக்க வேண்டும் என மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால், கர்நாடகத் தேர்தலை கருத்தில் கொண்டு செயற்திட்டத்தை உருவாக்க மத்திய அரசு அவகாசம் கேட்டது. இதையடுத்து மே மாதம் 3 ஆம் திகதிக்குள் வரைவு செயற்றிட்டத்தைத் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது.

அதன்படி வரைவு செயல் திட்டம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்றன. ஆனால் இது தொடர்பாக முழுமையான அறிக்கை தயார் ஆகாததால்,



கூடுதல் அவகாசம் கேட்கப்படலாம் எனக் கூறப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு வரும்போது மத்திய அரசு சார்பில் கூடுதல் அவகாசம் கேட்டு மனுத்தாக்கல் செய்யலாம் என்றும் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், காவிரி விவகாரம் தொடர்பாக மத்திய அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று இடைக்கால மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

வரைவு செயற்றிட்டத்தைத் தாக்கல் செய்வதற்கு கால அவகாசம் கோருவதற்காகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை அவசர வழக்காக உடனடியாக விசாரிக்கும்படி மத்திய அரசின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார்.

ஆனால், மத்திய அரசின் கோரிக்கையை உச்ச நீதி மன்றம் நிராகரித்தது. இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனக் கூறியுள்ளது.

## வைகோ மீது வழக்கு பதிவு!



சென்னை, மே 02

பொது அமைதிக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் பேசினார் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ மீது தூத்துக்குடி பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஸ்டெர்லைட் ஆலையை மூட வலியுறுத்தி வாகனப் பிரசாரம் மேற்கொண்ட வைகோ கடந்த 28 ஆம் திகதி தூத்துக்குடியில் நடந்த கூட்டத்தில் பேசினார்.

அப்போது, பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாகவும், அரசுக்கு எதிராகவும், பொது அமைதிக்கு எதிராகவும் பேசினார் என ஐபிசி 505(1) (பி), 7 (1) (ஏ) ஆகிய பிரிவுகளின் கீழ் தூத்துக்குடி தென்பாகம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

## சேலத்தில் கந்துவட்டி கொடுமை; 3 பேர் விஷமருந்தித் தற்கொலை!

சேலம் அருகே கந்துவட்டிக்கொடுமையால் விவசாயி ஒருவர் மனைவி மற்றும் மகனுக்கு விஷம் கொடுத்து, தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

விவசாயின் மற்றொரு மகன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சேலம் மாவட்டம் தம்மம்பட்டி அருகே புலிக்கரடுபதியைச் சேர்ந்தவர் விவசாயி அர்ஜுனன் (வயது 43). இவர் தன் மனைவி வெண்ணிலா ( வயது 35) மற்றும் மகன்கள் மோகன் (வயது 10), பிரகாஷ் (வயது 7) ஆகியோருடன் வாழ்ந்து வந்தார்.

இந்நிலையில், நேற்றுக் காலையில் வெகு நேரமாகியும் அர்ஜுனன் வீட்டிலிருந்து யாரும் வெளியேவராதமையால் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்துள்ளனர். அப்போது, அர்ஜுனன், வெண்ணிலா, பிராகாஷ் ஆகியோர் இறந்த நிலையிலும், மோகன் உயிருக்கு ஆபத்தான நிலையிலும் இருந்ததைக் கண்டனர்.

இதையடுத்து, உடனடியாக தம்மம்பட்டி பொலிஸாருக்குத் தகவல் அளிக்கப்பட்டது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மோகனை மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மோகன் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

முதற்கட்ட விசாரணையில், விவசாயி அர்ஜுனன் தன் மனைவி மற்றும் மகன்களுக்கு உணவில் விஷம் கலந்து கொடுத்துவிட்டு, தானும் அதைச் சாப்பிட்டுத் தற்கொலை செய்துகொண்டது தெரியவந்தது.

விவசாயி அர்ஜுனன் சிலரிடம் கடன் வாங்கியுள்ளார் எனவும் அதனை அடைக்க முடியாத நிலையில் கடன் கொடுத்தவர்கள் அவருக்கு நெருக்கடி அளித்ததால் இந்த முடிவை எடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தரப்பில் கூறப்படுகிறது.

கந்துவட்டி கொடுமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளளது.

## காவிரி மேலாண்மைச் சபையின் விவகாரத்தில் மத்திய அரசு தன்னிச்சையாக செயல்பட முடியாது!

காவிரி மேலாண்மைச் சபை விவகாரத்தில் மத்திய அரசு தன்னிச்சையாக ஒன்றும் செய்ய முடியாது என மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மதுரை விமான நிலையத்தில் நேற்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தவை வருமாறு:-

எஸ்சி, எஸ்டி மக்கள் அதிகமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான மத்திய அரசின் திட்டங்கள் சென்று சேர்கிறதா? எனக் கிராமங்களில் தங்கி ஆய்வு செய்யதுள்ளேன்.

காவிரி மேலாண்மைச் சபை விவகாரத்தில் மத்திய அரசு தன்னிச்சையாக ஒன்றும் செய்ய முடியாது. மாநிலங்களிடம் கலந்தாலோசித்து வாரியம் எப்படி அமைக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். அதன் பிறகு தான் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இனிமேல் குடிக்காதீங்க அப்பா;

## தூக்கில் தொங்கிய மாணவனின் கடிதம்!



தமிழ்நாட்டில் டாஸ்மாக் கடைகளை மூட வலியுறுத்தி பள்ளி மாணவர் தற்கொலை செய்து கொண்டுள்ள நிலையில் முதல்வருக்கு உருக்கமான கடிதம் ஒன்றையும் எழுதிவைத்துள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த தினேஷ் என்பவர் 12 ஆம் வகுப்பு மாணவன்.

தினேஷின் தந்தை, கடந்த சில ஆண்டுகளாக மோசமான குடிப் பழக்கத்துக்கு அடிமையானதால் வீட்டில் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதனால், தினேஷ் குடும்பம் வறுமையில் வாடியதோடு அவரும் சரியாகப் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தினேஷ் நேற்று திருநெல்வேலியின் தெற்குப் புறவழிச்சாலை ரயில்வே மேம்பாலத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தற்கொலைக்கு முன் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு அவர் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், தந்தையின் மது பழக்கத்தால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாகத் தற்கொலை செய்கிறேன், தயவு செய்து டாஸ்மாக்கை மூடுங்கள் எனக் கோரியுள்ளார்.

## மாணவர்கள், இளைஞர்கள் திரண்டு கடலூரில் இன்று போராட்டம்!

சென்னை, மே 03

ககாவிரி நீரைக்கோரியும், அழிவுத் திட்டங்களை எதிர்த்தும் இன்று கடலூரில் நடைபெறும் போராட்டத்துக்கு மாணவர்கள், இளைஞர்களுக்கு இயக்குநர் பாரதிராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் இயக்குநர் பாரதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழீழ இனப்படுகொலை, தமிழினத்தின் ஆற்றுநீர் உரிமைகள் பறிப்பு, அணு உலை, மீத்தேன், ஹைட்ரோ கார்பன், நியூட்ரினோ, ஸ்டெர்லைட் போன்ற இயற்கைவள ஆதாரங்கள் அழிப்புத் திட்டங்கள், தமிழக உழவர்கள், தொழிலாளர்களின் வாழ்வாதாரங்கள் மீதான தொடர் தாக்குதல்கள்




ஆகியவற்றைத் தமிழக மக்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக கடுமையாகக் கடுஞ்சினத்தோடு எதிர் கொண்டு வருகிறோம்.

ஆதிக்க நடவடிக்கைகளுக்கு எதிர் ஆற்றலாக ஒரு புதிய உலகு தழுவிய தமிழ்த் தேசிய உணர்வு மீண்டும் சுடர் விட்டிருக்கிறது. பத்தாயிரம் ஆண்டு மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கம் தமிழ் இன மக்களாகிய நமக்குத் தீர்க்கமான, தீவிரமான கடமைகளை முன்வைக்கிறது.

நீட் என்பது மருத்துவக் கல்வி அந்தத் தமிழக மாணவர்களின் சிக்கல் மட்டுமல்ல. தமிழ்நாட்டின் எதிர்கால நலன், கல்வி நலன் மீதான பெரும் தாக்குதல், இந்தியக் கூட்டாட்சி அமைப்பில் 1976 வரை மாநிலப்பட்டியலில் இருந்த கல்விப் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டு, கல்விக் கொள்கைகள், அதிகாரங்கள் அனைத்தையும் ஒன்றிய அரசு அபகரித்துக் கொண்டுள்ளது.

தமிழ் விவசாயிகளைத் தமிழ் நிலங்களிலிருந்து அப்புறப்படுத்திவிட்டு அங்கே ஹைட்ரோ கார்பனை எடுக்க விரும்புகிறார்கள். அவர்கள் தமிழ் மீனவர்களைத் தமிழர் கடலோரங்களிலிருந்து அகற்றிவிட்டு, தமிழ்க் கடலை ராணுவமயமாக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்த நிலையில், நீர், நிலம், வான் என அனைத்திலும் அழுக்காகப்படிருந்திருக்கும் ஆளும் அதிகார வர்க்கத்தின் துரோகத்தை எதிர்த்து மக்களாகிய நாம்தான் குரல் எழுப்ப வேண்டும்.

காவிரி உரிமை மீட்க, ஸ்டெர்லைட், நியூட்ரினோ, கூடங்குளம் போன்ற அழிவுத் திட்டங்களிலிருந்து தமிழ் நாட்டைக் காப்பாற்ற, மதவாத வெறுப்பு அரசியலில் இருந்து தமிழக மக்களைக் காப்பாற்ற, மாணவர்கள், இளைஞர்களோடு இணைந்து நின்று இயக்குநர் கவுதமன் முன்னெடுக்கும் நீட் வேண்டாம், நீர் வேண்டும் என்ற உக்கிரமான கோரிக்கையோடு தமிழர்களான நாம் அலை கடலென எழுந்து நிற்போம். போராடுவோம் வென்று காட்டுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

(க)

காலைக்கதிர்



## தீர்வில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை விரைவாகக் கூட்டுமாறும் அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கூட்டமைப்பின் தலைவருக்கு நேற்று அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நீண்ட காலமாகக் கூட்டப்படாது இருப்பதால் அதனை விரைவில் கூட்டிச் சமகால அரசியல் விடயங்கள் மற்றும் உள்ளூராட்சித் தேர்தலின் முன், பின்னரான விடயங்கள் பற்றி ஆராய்வது உசிதமானதாக இருக்கும்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எமக்குச் சற்றுப் பின்னடைவை ஏற்படுத்தியமையை நாம் ஏற்றுக் கொண்டு அதற்கான திருத்தங்களையும், தீர்வுகளையும் மீட்டுப் பார்ப்பது பொருத்தமானது எனக் கருதுகின்றேன்.

அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்திலும் கூட்டு அரசின் இழுபறி நிலை அல்லது காலம் தாழ்த்தும் போக்கு எம் மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது விடயமாகவும் அரசுக்கு கூடுதலான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாண்டின் இறுதியில் அல்லது அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலின் பரபரப்புக்கள் ஆரம்பித்திருப்பதால் தீர்க்கமான முடிவுகளை எடுத்து மக்களின் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பக் கூடிய வகையில் முன் கூட்டியே ஆயத்தப்படுத்துவதற்கு ஏதுவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தயார்ப்படுத்தலின் அவசியம் எல்லோராலும் உணரப்படுகின்றது.

எனவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு எமது கட்சியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை விரைந்து நடத்தப் பொருத்தமான நாளை ஒழுங்குபடுத்தித் தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். – என்றுள்ளது. (ஐ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சிப் பொலிஸாரால் நேற்றுப் புதன்கிழமை காலை முதல் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன எனக் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் கொள்கலன் ஒன்று, அறிவியல்நகர் பகுதியில் காணப்படுகின்றனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அறிவியல்நகர்ப் பகுதியில் புலிகளின் ஆயுதங்கள் காணப்படுகின்றன எனக் கருதி ஏற்கனவே அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் எவ் வித ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை. இந் நிலையில் தற்போது மீண்டும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த அகழ்வுப்பணிகள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான், நீதிமன்றப் பதிவாளர், கிராம சேவையாளர் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 20,000 பட்டதாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகத் தேர்வு நிறைவடைந்துள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக 20 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் நியமனக் கடிதம் வழங்கப்படும்.

– இவ்வாறு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் அசங்க தயாரட்ண தெரிவித்தார்.

அத்துடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப்படும் அனைவருக்கும் இரண்டு ஆண்டுகள் பயிற்சிக் காலமாக முன்னர் நிர்ணயிக்கப்பட்ட போதும், அதனை ஓர் ஆண்டாகக் குறைக்கத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2016 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்ற பட்டதாரிகளிடம் பதிவுகள் பெறப்பட்டன. அதனடிப்படையில் நாடு முழுவதும் 57 ஆயிரம் பட்டதாரிகளிடம் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

அவர்களில் 20 ஆயிரம் பட்டதாரிகள் தகுதி பெற்றுள்ளனர். அவர்களுக்கு ஒரு ஆண்டு காலப் பயிற்சியின் போது, 20 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படும். பயிற்சியின் நிறைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்தார். (ஐ)

## முள்ளிவாய்க்காலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் ஒத்துழைப்பு நல்குங்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி, நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பல்கலைக்கழக மாணவர்கள் எங்கள் தமிழ் உறவுகள் அழிக்கப்பட்ட நினைவு நாளை நினைவிற்கொள்ள முன்வந்து அதற்கான அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இந்த நிகழ்வை நடத்தும் மாணவர்களுக்கு நாம் அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

மே – 18 அன்று தமிழ் மக்கள் ஒன்றிணைந்து ஒரே இடத்தில் எமது தமிழ் உறவுகளுக்காக நினைவேந்தலை மேற்கொள்ள வேண்டும். அழிக்கப்பட்ட எம் தமிழ் உறவுகளுக்காக தமிழர்களின் ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்குச் சுடர் ஏற்ற வேண்டும் .

தமிழ் மக்கள் அழிக்கப்பட்ட ஒரே இடத்தில் தமிழர்கள் ஒற்றுமையைக் காட்டவேண்டும். எனவே அரசியல்சார்ந்தவர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புக்கள், மற்றும் பொது மக்கள் என அனைவரும் ஓரிடத்தில் அணி திரளுங்கள். – என்று தெரிவித்தார். (ஐ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியில் உள்ள காட்டுப் பகுதியில் நேற்றுத் திடீரெனத் தீ பரவியது.

நேற்றுப் பிற்பகல் வேளையில் இந்தத் தீ பரவியதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

தீப்பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு 64 ஆவது படைப்பிரிவினர் தீவிர முயற்சியில் ஈடுபட்டனர்.

நிலவும் அதிக வெப்பநிலை காரணமாகவே இந்தத் தீப்பரவல் ஏற்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (ஐ)

## 57,000 பட்டதாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபட்டதாரிகளை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் இணைக்கும் நேர்முகத் தேர்வில் சுமார் 57 ஆயிரம் பட்டதாரிகள் பங்கேற்றனர்.

எனினும் கோரப்பட்ட தகுதி நிலைகளின் அடிப்படையில் சுமார் 20 ஆயிரம் பட்டதாரிகளே தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நியமனம் அடுத்த மாதம் வழங்கப்படும் எனத் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அது தொடர்பிலேயே வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் அனைவரும் ஒரே தடவையில் அரச சேவைக்குள் உள்வாங்கப்படுவார் என்று ஜனாதிபதியும் பிரதமரும் உறுதியளித்திருந்தனர்.

எனினும் தற்போது நடைபெற்று முடிந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கான நேர்முகத் தேர்வில் தோற்றிய சுமார் 57 ஆயிரம் பட்டதாரிகளில் 20 ஆயிரம் பேருக்கே பணி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் பட்டம் பெற்றிருக்கவேண்டும், வயதெல்லை 35ஆக மட்டுப்படுத்தப்படும், பட்ட மேற்படிப்பு முடித்தோருக்கு மேலதிக புள்ளிகள் உள்ளிட்ட நிபந்தனைகள் ஜனாதிபதியும் பிரதமரும் வழங்கிய உறுதி மொழியில் இடம்பெற்றிருக்கவில்லை.

நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டபின்னரே நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. எனவே அரசின் இந்தக் கண் துடைப்பு நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. பட்டதாரிகள் அனைவரும் ஒரே தடவையில் அரச சேவைக்குள் இணைக்கப்படவேண்டும் என்று பட்டதாரிகள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தமது கோரிக்கைகளை முன்வைத்து வரும் 8ஆம் திகதி தலைநகர் கொழும்பில் மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் அவை குறிப்பிட்டுள்ளன. (ஐ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்கள் மற்றும் வடமேல் – ஊவா மாகாணங்களில் சில பகுதிகளில் 38 பாகை செல்சியஸுக்கு அதிகமான வெப்பநிலை நிலவும் எனத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வெப்பநிலை உச்ச அதிகரிப்பு மக்களின் உடல் நிலையைப் பாதிக்கும். குடிதண்ணீரை அதிகளவு பருகுவது அவசியம். செயற்பாடுகளில் சோர்வு நிலை ஏற்படும். நீண்ட நேரச் செயற்பாடுகளால் உடலில் அதிக உஷ்ணம் ஏற்படும் என்று சுகாதார அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

வேலைத்தளங்களில் ஈரப்பதன் உள்ள பகுதிகளில் இருப்பது நல்லது. நிழலில் ஓய்வெடுப்பது அவசியம்.

உள்புறங்களில் – முதியவர்கள் மற்றும் நோயாளிகள் பரிசோதனை செய்தல் அவசியம்.

வாகனங்களில் குழந்தைகளை ஏற்றிச் செல்லாதீர்கள்.

வெளிப்புறங்களில் கூடியளவு ஈரப்பதன் உள்ள நிழல்களில் இருப்பது நல்லது. – என்று வளி மண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது. (ஐ)

## ராஜாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதியவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. ஏற்கனவே பதவிகளில் இருந்தவர்களிடையேதான் விடயதான மாற்றங் கள் இடம்பெற்றுள்ளன.

நீர்ப்பாசன, நீர்வளங்கள் மற்றும் இடர்முகாமைத்துவ இராஜாங்க அமைச்சராக பாலித ரங்கே பண்டாரவும், மீன்பிடி, நீரியல் வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சராக திலிப் வெத ஆரச்சியும், பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவும், உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக மோகன்லால் கிரேரேயும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சராக சம்பிக்க பிரேமதாஸவும், விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆய்வுகள், திறன் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி அபிவிருத்தி, கண்டி மரபுரிமைகள் இராஜாங்க அமைச்சராக லக்ஷ்மன் செனவிரத்னவும், விளையாட்டுத்துறை, மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சராக ஸ்ரீலானி விஜேவிக்கிரமவும், மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக வீரகுமார திஸாநாயக்கவும் பதவியேற்றனர்.

**பிரதியமைச்சர்கள் விவரம்.**

1. துனேஷ் கங்கந்த – காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு பிரதியமைச்சர்.

2. எம்.எஸ்.அமீர் அலி – மீன்பிடி, நீரியல்வளம் மற்றும் கிராமிய பொருளாதார பிரதியமைச்சர்.

3. ரஞ்சன் ராமநாயக்க – சமூக வலுவூட்டல் பிரதியமைச்சர்.

4. கருணாரத்ன பரணவிதான – விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆய்வுதிறன் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் மலையக பாரம்பரிய பிரதியமைச்சர்.

5. பாலித தேவரப்பெரும – நிலைத்திருக்கும் அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி பிரதியமைச்சர்.

6. சாரதி துஷ்மந்த – நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதியமைச்சர்.

7. முத்து சிவலிங்கம் – சமூக நலன்பேணல் மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதியமைச்சர்.

8. மனுச நாணயக்கார – தொழில்நுட்பம், டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர்.

9. எச்.எம்.எம்.ஹரீஸ் – பொது முயற்சியாண்மை மற்றும் கண்டி அபிவிருத்தி பிரதியமைச்சர்.

10. அலிஸாஹிர்மௌலானா – தேசிய சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் பிரதியமைச்சர். (ஐ)

## கிளைபோசெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதிக்குச் சீனாவினால் கட்டுப்பாடு விதிக்கப்படும் அபாயம் இருப்பதால் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் வாகனத்தில் பயணித்த பயணிகள் தெய்வாதீனமாக எதுவித காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பியுள்ளனர்.

இ[illegible] வேளை, நேற்று மா[illegible] யாழ். நோக்கி தேங்காய்களை ஏற்றி சென்ற லொறி ஒன்று ஓமந்தைப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டுள்ளது.

இந்த விபத்திலும் பொறியில் பயணித்தவர்கள் காயங்களின்றி உயிர் தப்பியுள்ளனர். இதேவேளை, இந்த இரண்டு விபத்து சம்பவங்கள் தொடர்பிலும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## இயலாமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பியின் பிரசாரச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 குறைப்போம். விஞ்ஞான முறைப்படி அமைச்சுக்களைப் பிரிப்போம் என்ற வாக்குறுதியை வழங்கியே அரசு பதவிக்கு வந்தது.

கடந்த அரசின் அமைச்சரவை நாடு தங்கிக்கொள்ள முடியாதளவில் மிகப் பெரியது என அனைத்துத்துறைகளிலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதால், புதிய அரசுக்கு அமைச்சரவையின் எண்ணிக்கையைக் குறைக்குமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

எனினும், ஆட்சிக்கு வந்ததும் வாக்குறுதியை மீறினார்கள். எந்த விஞ்ஞான முறையும் இன்றி அமைச்சுக்களின் துறைகளை உடைத்தனர்.

அது மாத்திரமல்ல, ராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் என அமைச்சு பதவிகள் குட்டி போடும் நிலைமை உருவானது. தற்போது நான்காவது அமைச்சரவை மாற்றமும் கேலிக்குரியதாக மாறியுள்ளது. துறைகள் பிரிக்கப்பட்டதில் எந்த அடிப்படையும் இல்லை.

அமைச்சுப் பதவிகளை வழங்கும்போது ஒன்றில் பழி வாங்குகின்றனர். அல்லது நெருக்கத்தை அதிகரித்து கொள்கின்றனர். அதுவும் இல்லை என்றால் அரசில் இருந்து விலகுவதைத் தடுக்கும் அன்பளிப்பதாக அமைச்சுப் பதவிகளை வழங்குகின்றனர்.

நாட்டில் நகரங்கள் பெருமளவில் இருக்கும் நிலையில், அவற்றை அபிவிருத்தி செய்ய பெருநகர அபிவிருத்தி என்ற அமைச்சு ஏற்படுத்தப்பட்டது.

அந்த அமைச்சு இருக்கும் நிலையில், பிராந்திய ரீதியாக அமைச்சுக்களைப் பிரித்துள்ளனர். சிலருக்கு ஒரு நகரத்தின் அபிவிருத்தி ஒப்படைக்கப்பட்டுள்ளது -- என்றார். (ஐ)

# முரளிதரன் இலங்கையை மோசமாக சித்தரித்துள்ளார்

## தயாசிறி சீற்றம்

அரசியல்வாதிகளின் தலையீட்டினால் இலங்கைக் கிரிக்கெட்டுக்குக் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனக் கருத்து தெரிவித்துள்ள தன் மூலம் இலங்கையை முன்னாள் வீரர் முத்தைய முரளிதரன் மோசமாகச் சித்தரித்துள்ளார் என முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஒப்சேவரிற்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் விளையாட்டு அமைச்சராக



இல்லாதபோதிலும் இலங்கையின் விளையாட்டு வீரர்களுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பேன்.

அரசியல்வாதிகள் விளையாட்டில் ஆர்வம் காட்டுவது இலங்கையைப் பொறுத்த வரை புதிய விடயமல்ல, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் கிரிக்கெட் அமைப்புகளின் தலைவர்களாக அரசியல்வாதிகள் உள்ளனர். இதன் காரணமாகப் பல வருடங்களாக அரசியல்வாதிகள் விளையாட்டுத்துறையுடன் தொடர்பைக் கொண்டுள்ளனர்.

ஆஸ்திரேலிய நடுவர்கள் முரளிதரன் பந்தை எறிகின்றார் எனக் குற்றம்சாட்டியவளை முரளிதரனுக்கு அவ்வேளை விளையாட்டமைச்சராகயிருந்தவரும் நிர்வாகிகளும் ஆதரவு வழங்கினர்.

முத்தையா முரளிதரன் இந்திய ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிப்பதற்குப் பதில் இலங்கை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்திருக்க வேண்டும். முரளிதரன் இலங்கையை மோசமாகச் சித்தரித்துள்ளார். அவரின் கருத்துக்களை நான் ஏற்கப் போவதில்லை. பல விளையாட்டு வீரர்கள் எங்களை அணுகி ஆதரவும் உதவியும் பெறுகின்றனர். நாங்கள் தொடர்ந்தும் அவர்களுக்கு ஆதரவு வழங்குவோம். லசித் மலிங்க குறித்து எனக்குத் தனிப்பட்ட பகையில்லை. அவர் என்னை எப்படி அழைத்தார் என்பது குறித்தும் நான் கவலையடையவில்லை.

எனக்கு லசித் மலிங்கவின் கல்வித் தகைமை என்னவென்பது தெரியும். அவர் சிறந்தவீரர். ஆனால் தனது கிரிக்கெட் வாழ்க்கையை எப்படி உருவாக்கி கொள்ளவேண்டும் என்பது அவருக்கு தெரியாது-என்றார்.



# இந்திய அணி தொடர்ந்தும் முதலிடத்தில்

ஐ.சி.சி. டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. ஐ.சி.சி. வெளியிட்டுள்ள டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசை பட்டியலில் விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி 125 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

2016-17ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்திய அணி 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 10 போட்டிகளில் வெற்றி பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்க அணி 112 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் அவுஸ்திரேலிய அணி 106 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளன.

மேலும் நியூஸிலாந்து அணி 102 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும் இங்கிலாந்து அணி 98 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்திலும், இலங்கை அணி 94 புள்ளிகளுடன் 6ஆவது இடத்திலும், உள்ளன.

டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் எதிர்வரும் காலத்தில் முழு நேர டெஸ்ட் அந்தஸ்து பெற்றுள்ள ஆப்கானிஸ்தான், அயர்லாந்து அணிகளும் இடம் பெற உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ஜொலிஸ்ரார் திரில் வெற்றி

கொக்குவில் சன சமூக நிலையம் யாழ்ப்பாண மாவட்டக்கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார் அணி இமாலய வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 29.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக சஜிகன் 56 ஓட்டங்களையும், பிரசன்னா 31 ஓட்டங்களையும், சந்தோஸ் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் துஸ்யந்தன் 4 இலக்குகளையும், விஸ்ணு 2 இலக்குகளையும், விதுசன், மதன், பிரசாந்த், துசிகரன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 18.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 71 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அதிகபட்சமாக சுதர்சன் 20 ஓட்டங்களையும், பிரசாந்த் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் உமாகரன் 3 இலக்குகளையும், பிரசன்னா, சந்தோஸ் 2 இலக்குகளையும் வாமணன், சாரங்கன் ஆகியோர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

# சாலாவுக்கு விசேட விருது

லிவர்பூல் கழகத்தின் நட்சத்திர வீரர் மொஹமட் சாலாவுக்கு விருது வழங்கப்பட்டுள்ளது. உதைபந்தாட்ட எழுத்தாளர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவின் ஊடாக மொஹமட் சாலாவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. உதைபந்தாட்ட எழுத்தாளர்களின் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரராக சாலா தெரிவாகியுள்ளார்.

இந்த பருவ காலத்தில் லீக் ஆட்டங்களில் மொஹமட் சாலா 31 கோல்களை போட்டுள்ளார்.

இந்த விருது ஆபிரிக்க நாட்டவர் ஒருவருக்கு வழங்கப்படும் முதல் சந்தர்ப்பம் இது வென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மலிங்கவுக்கு நிபந்தனை

கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் இலங்கை அணியில் வேகப் பந்துவீச்சாளர் லசித் மலிங்க இடம்பெறவில்லை. அவர் மீண்டும் இலங்கை அணியில் இடம்பெறவேண்டும் என்றால் உள்ளூர்ப் போட்டிகளில் விளையாட வேண்டும் என்று இலங்கைக் கிரிக்கெட் சங்கம் பணித்துள்ளது.

மலிங்கவை அணியில் மீண்டும் சேர்க்க தேர்வுக்குழுவினர் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். ஆனால் அதற்கு உள்ளூர்ப் போட்டிகளில் அவர் விளையாட வேண்டும் என்று தேர்வுக்குழுவினர் விரும்புகிறார்கள்.

ஒருவேளை மலிங்கவால் உள்ளூர்ப் போட்டிகளில் விளையாட முடியாமல் போனால், அவருடைய தேர்வு குறித்து தேர்வுக்குழுவினர்தான் முடிவெடுக்க வேண்டும் என்று இலங்கைக் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக உள்ள மலிங்க, ஐ.பி.எல். போட்டி முடிந்தபிறகே தான் இலங்கைக்குத் திரும்பவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஐ)



# மோசமான சாதனையைப் படைத்த மும்பை அணி



ஐ.பி.எல்.2018 சீசனில் மும்பை அணியை சேர்ந்த வீரர்கள் 12 முறை 'டக் அவுட்' ஆகி மோசமான சாதனையைப் படைத்துள்ளனர்.

ஐ.பி.எல் தொடரின் 31வது லீக் ஆட்டத்தில் பெங்களூர்-மும்பை அணிகள் நேற்று முன்தினம் மோதின. இந்த போட்டி யில் முதல் ஆடிய பெங்களூர் அணி 7 விக்கெட் இழப்புக்கு 167 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் ஆடிய மும்பை அணி யில், இஷான் கிஷான் முதல் ஓவரிலேயே 'டக் அவுட்' ஆனார். இந்த சீசனில் மட்டும் அவர் இது போன்று மூன்று முறை ஆட்டமிழந்துள்ளார். கடந்த போட்டியில் கிானும், சூர்யகுமார் யாதவும் 'டக் அவுட்' ஆகினர்.

இஷான் கிஷானைத் தொடர்ந்து, களமிறங்கிய மும்பை அணியின் தலைவர் ரோஹித் ஷர்மா 'கோல்டன் டக் அவுட்' ஆனார். அவர் இரண்டாவது முறையாக இந்த சீசனில் 'டக் அவுட்' ஆகியுள்ளார். மேலும், ஐ.பி.எல் போட்டிகளில் இதுவரை 9 முறை 'கோல்டன் டக்-அவுட்' ஆகியுள்ளார்.

இந்நிலையில், இந்த சீசனில் மும்பை அணியைச் சேர்ந்த 12 வீரர்கள் 'டக் அவுட்' ஆகி, புதிய சாதனையை படைத்துள்ளனர். அவர்களில் 8 பேர் 'கோல்டன் டக்-அவுட்' ஆகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் தான் மிகவும் குறைவாக 2 பேர் மட்டுமே 'டக் அவுட்' ஆகியுள்ளனர். (ஐ)

Kolkata Knight Riders v Chennai Super Kings
இன்று
03.05.2018
இரவு 8.00 மணி

# எம்மை ஒருபோதும் அரசு அடிமைப்படுத்த முடியாது

## மே தினக் கூட்டத்தில் மாவை ஆவேசம்!



கிளிநொச்சி, மே 03

**அரசு தனது கட்டளைகளால் எம்மை அடிமைப்படுத்த முடியாது என்பதை இந்தத் தொழிலாளர் தினத்தில் நிரூபித்துள்ளோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.**

**கிளிநொச்சியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**

பௌத்த பிக்குகளின் சொல் கேட்டு நடக்கும் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவிப்பை நாம் ஏற்காமல் மிகவும் கவனமாகவும் பக்குவமாகவும் இந்த மேதினக் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளோம்.

தந்திரோபாயத்துடன் வடக்கு - கிழக்கு முழுவதும் நாம் துணிவுடன் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த மேதினக் கொண்டாட்டங்களின் ஊடாக போராட்ட வழியில் வந்தவர்கள் என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றோம்.

இலட்சக்கணக்கில் உயிர்களைப் பலிகொடுத்த மக்கள் வெறுமனே பேரினவாதத்தின் அதிகாரத்திற்குள் அடங்கிப் போவார்கள் என்பது அல்ல. எமது இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் அரசின் அடக்குமுறைகளும் கட்டளைகளும் எம்மை அடிமைப்படுத்தாது என்பதுடன், நாம் அடுத்தகட்ட நகர்வுக்கான உத்திகளைக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதையே இந்தப் போராட்டங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

எதிர்காலத் தலைமைத்துவத்தை விடுதலை உணர்வுடன், சுதந்திரம் கொண்டவர்களாகவும், தமது மண்ணிலே ஆளப்பிறந்தவர்களாகவும் எமது சந்ததியை உருவாக்குவதற்கு இந்தத் தொழிலாளர் தினத்தில் நாம் திடசங்கற்பம் கொள்ளவேண்டும் - என்றார். (ஐ)

# முல்லைத்தீவுச் செயலக அதிகாரிகள் இரத்த தானம்






முல்லைத்தீவு, மே 03

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை இரத்த வங்கியின் கோரிக்கைக்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்ட செயலக அதிகாரிகள் நேற்று இரத்த தானத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் இரத்தத்தை வழங்கி இரத்ததானத்தை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து மாவட்ட செயலக அதிகாரிகள் இரத்த தான நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

# வவுனியா அதிபர்கள் நேற்றுப் போராட்டம்



வவுனியா, மே 03

வவுனியா வடக்குக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மிகை நிரப்பு அதிபர்கள் மற்றும் கடமை நிறைவேற்று அதிபர்கள் ஆகியோர் நேற்றுப் புதன்கிழமை காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபட்டனர்.

கடந்த ஆறு ஆண்டுகளாக மிகை நிரப்பு அதிபர்களாகக் கடமையாற்றுபவர்கள் நிரந்தர நியமனத்திற்கு உள்வாங்கப்படாமையால் அதிபர்களுக்கான கொடுப்பனவுகள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்களைக் கோர முடியாதநிலைஉள்ளதாகத் தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் இவ்வாறு அதிபர்களாக பணியாற்றியவர்கள் நிரந்தர நியமனங்களுக்கு உள்வாங்கப்பட்டதாகத் தெரிவித்த அதிபர்கள், தாமும் அவ்வாறு உள்வாங்கப்படுவோம் என்ற நம்பிக்கையில் விசுவாசமாகப் பணியாற்றியதாகத் தெரிவித்தனர்.

சுமார் 40 அதிபர்கள் கலந்துகொண்ட இந்தப் போராட்டத்தில், நிரந்தர நியமனத்தை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்எனக் கோரிக்கைவிடுக்கப்பட்டது. (ஐ)

# விரைவில் பத்தரமுல்லைக்கு நகரும் அரச நிறுவனங்கள்

கொழும்பு, மே 03

அரசு புதிதாக அமைச்சரவை மாற்றங்களைச் செய்துள்ள நிலையில், கொழும்பு மா நகர நிர்வாக எல்லையில் தற்போது இயங்கிவரும் அனைத்து அரச நிறுவனங்களும், விரைவில் பத்தரமுல்லை நிர்வாக நகருக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

பத்தரமுல்லை நிர்வாக நகரில் ஏற்கனவே 113 அரச நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. தற்போது கொழும்பில் இயங்கிவரும் அரச நிதிப் பேரங்களுடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள் தவிர்ந்த ஏனைய சகல அரச நிறுவனங்களும் பத்தரமுல்லைக்கு இடம்மாற்றம் செய்யப்படும்.

இதன்பிரகாரம், ஜனாதிபதி மாளிகை மற்றும் அலுவலகம், பிரதமர் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் அலுவலகம் என்பன கொண்டு செல்லப்படும். அத்துடன், மேல் மாகாண அனைத்து அமைச்சுக்களும் அங்கு எடுத்துச் செல்லப்படும்.

பத்தரமுல்லை - செத்சிறிபாய இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட நிர்மாணப் பணிகள் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இவை பூர்த்தியானதன் பின்னர், ஏனைய அரச நிறுவனங்களும் அங்கு கொண்டு செல்லப்படும்.

கொழும்புமாநகரில்ஏற்பட்டுள்ள வாகன நெரிசலுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே, இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாக, பெரு நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# முள்ளிவாய்க்கால் மேற்கில் 25 வீடுகளுக்கு அடிக்கல்



முல்லைத்தீவு, மே 03

போரில் பாதிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் மேற்கைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்குத் தேசிய வீடமைப்பு அதிகார சபையினரால் வீடு அமைத்துக் கொடுப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுக் காலை முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் நடைபெற்றது.

முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் தலா ஐந்து இலட்சம்ரூபா செலவில் 25 வீடுகளை அமைத்துக் கொடுக்கத் தேசிய வீடமைப்பு அதிகார சபை முன்வந்துள்ளது.

இதற்கமைய இந்த மக்கள் குறிப்பாகத் தனிமையில் வாழும் வயோதிபர்கள் மற்றும் இளம் குடும்பங்கள் எனப் பல தரப்பட்டவர்கள் இந்த வீட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்தநிகழ்வில்வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சி.சிவமோகன், முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் முகாமையாளர் விஜித கமகே, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் இ.பிரதாபன், பிரதேச சபை உறுப்பினர் பூலோகராசா, கிராம அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு வீட்டுக்கான அடிக்கல்லை நாட்டினர். (ஐ)

# ஊடக சுதந்திர தின நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், மே 03

ஊடக சுதந்திர தினத்தில் ஊடகப் படுகொலையான சக நண்பர்களை நினைவு கூரும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள மறைந்த ஊடகவியலாளர்கள் நினைவு தூபிப் பகுதியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதன் பின்னர் அமரர் காமினி நவரட்ண (ஆசிரியர் சற்றர்டே ரிவியூ), மற்றும் ஏ.ஜே.கனகரத்தினா (ஊடகவியலாளர், சற்றர்டே ரிவியூ, சிரேஸ்ட விரிவுரையாளர்) ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு இன்று 4.00 மணிக்கு றக்கா வீதியில் உள்ள ஆர்ட் கலரியில் இடம்பெறவுள்ளது.

இதில் காமினி நவரட்ண பற்றிய புரிதல் என்ற தலைப்பில் மூத்த எழுத்தாளர் ஐ.சாந்தனும், காமினி நவரட்ணவின் காலம் என்ற தலைப்பில் ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரனும், ஏ.ஜே.கனகரத்தினா காலத்தால் நிலைத்தவர் என்ற தலைப்பில் பேராசிரியர் இ.சிவச்சந்திரனும், ஏ.ஜே பற்றிய தெற்கின் அறிதல் என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக மொழியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் விமல் சுவாமிநாதனும் உரையாற்றுவர். (ஐ)

# அமைச்சுப் பதவிகளை சரியாகப் பயன்படுத்துக

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, மே 03

தற்போது வழங்கப்பட்டுள்ள புதிய அமைச்சுப் பதவிகளை, அவரவர்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியது கட்டாயமாகும் எனத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

புதிய இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்கள் பதவிப்பிரமாண நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பதவி பெற்றுக் கொண்டுள்ள ஒருவர் தனது பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றவேண்டும் எனின் அதற்கு முறையான கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டியது அவசியம். பதவியில் அமர்ந்த உடனேயே உடனடியாக அவரது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்ப்பதனை விடவும், அவருக்குச் சிறு கால அவகாசம் கொடுத்து அதன் பின்னர் கடமைகளும் பொறுப்புகளும் முறையாக நிறைவேற்றுகின்றனரா என ஆராய்வதே முறையாகும் - என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ ஸ்ரீராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.